Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் 2037 புரட்டாதி 21 சனிக்கிழமை (07.10.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:312

## ஜி.சீ.ஈ. பெறுபேறு வெளியாகியது

யாழ்ப்பாணம், ஒக்.7

கடந்த எப்ரல் மாதம் நடத்தப்பட்ட ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் 'நேற்று முன்தினம் நள்ளிரவு இணையத் தளம் மூலம் வெளியாகின.

இதே வேளை - கொழும்பு மற்றும் அதன் அயற் பிரதேச பாடசாலைகளின் பெறுபேறுகள் நேற்றைய தினம் சம்மந்தப்பட்ட கல்லூரிகளின் அதிபர்களிடம் நேரில் கையளிக்கப்பட்டன.

(08ஆம் பக்கம் பார்க்க)

### நாளை மறுதினம் தொடக்கம்

## கல்விச் செயற்பாடுகளுக்குத் திரும்ப குடாநாட்டு மாணவர்கள் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஒக்.7

மாணவர்கள் கல்வியைத் தொடர்வதற்கான அக, புறச் சூழ்நிலைகள் யாழ். குடாநாட்டில் காணப்படாத போதிலும், பரீட்சைகளை நோக்கமாகக் கொண்டு மீண்டும் கற்றல் செயற்பாடுகளுக்குத் திரும்புமாறு தமிழ் மாணவர் ஒன்றியம் கேட்டிருக்கின்றது.

எதிர்வரும் திங்கட்கிழமை முதலும், புதன்கிழமை தொடக்கமும் மாணவர்கள் இரு கட்டங்களாகப் பாடசாலைகளுக்குச் செல்வர் என்றும் மாணவர் ஒன்றியம் தெரிவித்திருக்கின்றது.

இவ்விவகாரம் தொடர்பாக மாணவர் ஒன்றியம் நீண்ட அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது. அதில் இராணுவச் செயற்பாடுகள் கார

(08ஆம் பக்கம் பார்க்க)

## பாலைதீவுக் கடற்பரப்பில் வியாழன் இரவு மோதல்!

யாழ்ப்பாணம், ஒக்.7

யாழ். குடா கடலேரிக்கு அப்பால் உள்ள தீவுக் கூட்டங்களில் ஒன்றான பாலைதீவு என்ற இடத்தை அண்டிய கடற்பரப்பில் கடற்படையினருக்கும், கடற்புலிகளுக்கும் இடையில் பாரிய மோதல் ஒன்று இடம்பெற்றிருக்கிறது.

நேற்று முன்தினம் இரவு 8.45 மணியளவில் இந்தக் கடற்சமர் இடம்பெற்றிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. அங்கு

(08ஆம் பக்கம் பார்க்க)

### புலிகளின் 22 சடலங்களை மீட்டதாக படைத்தரப்பு அறிவிப்பு

# வெடித்தது வாகரையில் பெருஞ்சமர்!

### விமானங்கள் குண்டுமாரி; கடலிலிருந்து பீரங்கி மழை; தரையிலிருந்து ஷெல் வீச்சு

கொழும்பு, ஒக்ரோபர் 7

மட்டக்களப்பு மாவட்டம் வாகரைப் பகுதியில் இலங்கை அரசுப் படைகளுக்கும், புலிகளுக்கும் இடையில் நேற்றுக் காலை பெரும் சமர் வெடித் தது. புலிகள் நடத்திய வலிந்த தாக்குதல் நடவடிக்கையைத் தாங்கள் முறிய டித்து விட்டனர் என அரசுப் படையினரும் - அரசுப் படைகள் தங்களது கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் ஊடுருவி, முன்நகர்ந்து, பெரும் படை யெடுப்பு நடவடிக்கையை ஆரம்பித்தபோதே கடுஞ்சமர் வெடித்தது என்று புலிகளும் - அறிவித்தனர்.

விமானப்படை விமானங்கள் குண்டுமாரி பொழிய, கடலிலிருந்து கடற் படையின் படகுகள் பீரங்கித் தாக்குதல் நடத்த, மாங்கேணி படைமுகாம் இராணுவத்தினர் கடும் ஷெல் வீச்சு மேற்கொள்ள, அந்த முகாமிலிருந்து வாகரைக்குத் தெற்கே புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை நோக்கி அரச படைகள் பெரும் எடுப்பில் படை நகர்வை மேற்கொண்டன என்று பொதுமக்களை மேற்கோள் காட்டி 'தமிழ்-நெற்' இணையத்தளம் செய்தி வெளியிட்டது.

(08ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இராணுவ ஊடுருவலை ஏற்க முடியாது

### கண்காணிப்புக் குழு பேச்சாளர் கருத்து



மட்டக்களப்பு பிரதேசத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதிக்குள் இலங்கை இராணுவம் ஊடுருவியிருந்தால் அது முற்றாக ஏற்க முடியாத ஒன்று என இலங்கை போர்நிறுத்த கண்காணிப் புக் குழு தெரிவித்துள்ளது.

கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் தொர்பினூர் ஓமர்சன் இவ்வாறு தெரிவித்திருக்கிறார். அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

இரு தரப்பும் பேச்சுக்களுக்கு ஒப்புக்கொண்ட பின்னர் இத்தகைய ஊடுருவல் நடவடிக்கையானது ஒரு வலிந்த தாக்குதல் நடவடிக்கையாகவே கருதப்படுகிறது. வாகரைப்

(08ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் கடும் கடற்சமர்

கொழும்பு, ஒக்.7

மன்னார் கடற்பிரதேசத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், இலங்கைக் கடற்படையினருக்கும் இடையே நேற்று அதிகாலை கடும் கடற்சமர் ஏற்பட்டுள்ளது.

தலைமன்னார் மற்றும் தீவுப் பகுதிகளுக்கும் இடையேயான கேற்கரைத்தீவு கடற்பிரதேசத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நள்ளிரவு 12 மணிமுதல் அதிகாலை 2 மணிவரை இச்சமர் நடந்துள்ளது. இதுகுறித்த உறுதி செய்யப்பட்ட தகவல்கள் வெளிவரவில்லை. (க-12)

## பனிச்சங்கேணி ஆக்கிரமிப்பு முயற்சி முறியடிப்பு 30 இராணுவம், 5 புலிகள், 7 பொதுமக்கள் பலி!

### புலிகளின் திருமலை அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் கூறுகிறார்



கொழும்பு, ஒக்டோபர் 07

மட்டக்களப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதியான பனிச்சங்கேணி பிரதேசத்தை ஆக்கிரமிக்க முயன்ற இராணுத்தினரின் முன்நகர்வு முயற்சி முறியடிக்கப்பட்டது. இச்சமரில் 30 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். 5 போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

- இவ்வாறு திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்துள்ளார்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## 30 இராணுவத்தினர் பலியாகவில்லை புலிகள் தரப்பிலேயே அதிக உயிரிழப்பு

### இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்க தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.7

விடுதலைப் புலிகளுக்கு எந்தளவுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளது என்பதை உறுதியாகக் கூற முடியாது. ஆனால், முன்னரங்க காவல் நிலையத்திலிருந்த துருப்புகள் 20 முதல் 25 புலிகளின் உடல்களை அவதானித்துள்ளனர்.

- இவ்வாறு தெரிவித்தார் இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்க.

பனிச்சங்கேணிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பாக பி.பி.ஸி. தமிழோசைக்கு நேற்றிரவு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:-

இன்று அதிகாலை 4 மணியளவில் (நேற்று) கிழக்கேயுள்ள மாங்கேணி முகாம் மற்றும் முன்னரங்க காவலரண் என்வற்றின் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல்களை நடத்தினர். வாகரைப்

(08ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய வெளியுறவுச் செயலரை போவர் சந்திப்பு

கொழும்பு, ஒக்.7

இந்தியா சென்றுள்ள நோர்வேயின் சிறப்புத் தூதர் ஜோன் ஹன்ஸன் போவர் நேற்று இந்திய அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இந்திய வெளியுறவுத் துறைச் செயலர் சிவ் சங்கர் மேனன் மற்றும் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன் ஆகியோரை அவர் சந்தித்துள்ளார் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று மாலை இடம்பெற்ற இச்சந்திப்பில் அரசும், புலிகளும் பேச்சுக்கு இணங்கியமை குறித்தும், தற்போதைய (08ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பாதுகாப்புச் சபை கூடி முடிவு அனுசரணைத் தரப்புக்கு அவசர கடிதம்

### தமிழ்ச்செல்வன் சமர்ப்பிப்பு

கொழும்பு, ஒக்.7

இலங்கை இராணுவம் மட்டக்களப்பு மாவட்டம், மாங்கேணியில் உள்ள தனது முகாமிலிருந்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் சுமார் ஒன்றரைக் கிலோமீற்றர் தூரம் - பனிச்சங்கேணி வரை - முன்னேறியுள்ளது என்று புலிகள் குற்றம் சுமத்தியிருக்கின்றனர்.

படையினரின் இந்த வலிந்த தாக்குதல் நடவடிக்கையை அடுத்து களநிலைமை குறித்து ஆராய்வதற்காக புலிகளின் பாதுகாப்புக் கவுன்ஸில் கூட்டப்பட்டதாகப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் தெரிவித்தார்.

இதில் பெறப்பட்ட சில முடிவுகள் குறித்து நோர்வே தரப்பினருக்கு புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஓர் அவசர கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார் என்றும் இளந்திரையன் கூறினார்.

தற்போது இடம்பெற்றுவரும் தாக்குதல் சம்பவங்கள், நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் பேச்சுக்களைப் பாதிக்கும் எனவும் வலியுறுத்தியுள்ளார் -

நேற்று அவர் பி.பி.ஸிக்கு வழங்கிய செவ்வியிலேயே இந்தத் தகவல்களை வெளியிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:-

களமுனைகளில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் இல்லாத சூழ்நிலையை ஏற்படுத்திக் கொண்டு விடுதலைப் புலிக

(08ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொக்குவில் மேற்கில் இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,ஒக்.7

யாழ். லயன்ஸ் கழகம் ஏற்பாடு செய்துள்ள இலவச மருத்துவமுகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கொக்குவில் மேற்கு கேசாவில் பிள்ளையார் ஆலய வீதியில் உள்ள திருவள்ளுவர் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

கொக்குவில் மேற்கு மாதர் சங்கம் மற்றும் 'சொன்ட்' நிறுவனம் ஆகியவற்றின் ஆதரவுடன் நடத்தப்படவுள்ள இந்த மருத்துவ முகாமில் உயர் அழுத்தப் பரிசோதனை, நீரிழிவுப் பரிசோதனை மற்றும் பொது மருத்துவம் என்பன இடம்பெறும் என்று கழகத் தலைவர் எல்.டொ.ஸ்ரீபன் தெரிவித்துள்ளார்.

## கத்திக்குத்துக்கு இலக்காகி குடும்பஸ்தர் மரணம்

யாழ்ப்பாணம்,ஒக்.7

கத்திக்குத்தால் உயிரிழந்ததாகத் தெரிவித்து உயிரிழந்த குடும்பஸ்தர் ஒருவரின் சடலத்தை ஊர்காவற்றுறைப் பொலிஸார் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர். புங்குடுதீவைச் சேர்ந்த இரத்தினம் மைக்கல் கொலின் (வயது 33) என்னும் 3 பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார். (202-15-78)

# இணையம் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட குடாநாட்டின் முன்னணி ஜி.சீ.ஈ. பெறுபேறு

யாழ்ப்பாணம்,ஒக்.7

இணையத்தளம் மூலம் முற்கொண்டு பெறப்பட்ட ஜி.சீ.ஈ. உயர்தர முன்னணிப் பெறுபேறுகளின் விவரத்தை சம்பந்தப்பட்ட கல்லூரிகளின் அதிபர்கள் 'உதயனுக்கு' அனுப்பி வைத்துள்ளனர்.

இவ்வாறு கிடைக்கப்பெற்ற முன்னணிப் பெறுபேறுகளின் விவரம் வருமாறு:-

**யாழ். இந்துக் கல்லூரி**

**கணிதம்**

பா.அஜந்தன் (3ஏ-மாவட்ட நிலை9), உ.கனேஸ்வரன் (3ஏ- மாவட்ட நிலை16), ச.நந்தரூபன் (3ஏ-மாவட்ட நிலை 7), சி.சத்தியநாராயணன் (3ஏ-மாவட்ட நிலை17), ந.கோகுலன் (3ஏ-மாவட்ட நிலை27), சி.ஜயந்தன் (3ஏ-மாவட்ட நிலை14).

**உயிரியல்**

த.செருஜன் (3ஏ-மாவட்ட நிலை 12), க.கணேசன் (3ஏ-மாவட்ட நிலை 1), தி.உஷானந்த் (3ஏ-மாவட்ட நிலை 2), ச.தீபன் (3ஏ-மாவட்ட நிலை 13).

**வர்த்தகம்**

ச.ஜீவிதன் (2ஏ,பி).

**கலை**

நா.பாலதாஸ் (ஏ,2பி)

**வேம்படி மகளிர் கல்லூரி**

**கணிதம்**

மதுராந்தகா செல்வரத்தினம் (3ஏ), ரேகா திருநாவுக்கரசு (3ஏ), நீதிமப்பிரியா தர்மலிங்கம் (3ஏ).

**உயிரியல்**

தர்சனா குகதாஸ் (3ஏ), மாலினி பேரம்பலம் (3ஏ).

**கலை**

சாமந்தி வேலாயுதம் (3ஏ), மேரி டெல்சியா லோரன்ஸ் (3ஏ).

**வர்த்தகம்**

துஷ்பந்தினி நடராசா (3ஏ).

**புத்தூர் சோமாஸ்கந்தா**

**உயிரியல்**

இ.கோகுல்நாத் (2ஏ,பி-மாவட்டநிலை 21)

**கலை**

வி.கமலச்செல்வி (3ஏ-மாவட்ட நிலை 48), த.மதுரா (3ஏ-மாவட்ட நிலை 86), பொ.ஸ்ரீவர்ணன் (2ஏ,பி-மாவட்ட நிலை 64), ம.வானதி (2ஏ,சி), இ.ரஜீவன் (2ஏ,சி), ந.விக்கினேஸ்வரன் (ஏ,2பி), பா.முகுந்தினி (2ஏ,சி), த.காருண்யா (2ஏ,பி), இ.சுசிதா (ஏ,2சி).

**உடுவில் மகளிர் கல்லூரி**

**கலை**

அம்பிகாபதி குணபாலசுப்பிரமணியம் (3ஏ), கல்யாணி தேவராஜ் (3ஏ), மோகனாம்பிகை துரைரட்ணம் (3ஏ), சாரதாதேவி உலகரட்சகமணி (3ஏ), சுகன்ஜா இந்திரசிங்கம் (3ஏ), மேனகா நடராஜாசுந்தரம் (3ஏ), தர்மினி நரேந்திரநாதன் (3ஏ), அடீலா திருக்குமார் (2ஏ,சி மாவட்ட நிலை7), றியோபிலா அல்பிரட் (2ஏ,எஸ்), மேரி நிலுசா பேரின்பநாயகம் (2ஏ,பி), தாரணி சுந்தரலிங்கம் (2ஏ,பி), கஜிரி சிறிஹரன் (2ஏ,சி), பிரியதர்சினி சதாசிவம் (ஏ,2பி), சிறிவானதி ஸ்ரீதயாளன் (ஏ,2பி), நர்மதா அற்புதராஜா (ஏ,பி,சி), துளசி சந்திரபோஸ் (ஏ,பி,சி), டயானா மத்தியூ (ஏ,2பி), ஜமுனா சிவகுமாரன் (ஏ,பி,சி).

**கணிதம்**

சிவருசா சிவலிங்கம் (2ஏ,பி-மாவட்ட நிலை 19).

**விஞ்ஞானம்**

வசீகரி கந்தசாமி (ஏ,2பி - மாவட்ட நிலை 37).

**வர்த்தகம்**

தனுஜா கனகலிங்கம் (ஏ,பி,சி).

## குடாநாட்டில் பாணின் விலையில் மாற்றம் இல்லை

யாழ்ப்பாணம், ஒக்.7

குடாநாட்டில் பாணின் விலை அதிகரிக்கப்படவில்லை என்றும்-

தொடர்ந்தும் 450 கிராம் கொண்ட ஒரு றாத்தல் பாண் 28 ரூபாவாகவே விற்பனை செய்யப்படும் என்றும்-

யாழ். அரச அதிபர் கே. கணேஷ் நேற்றிரவு தெரிவித்தார்.

குடாநாட்டில் பாண் உற்பத்திகென வழங்கப்பட்டுள்ள கோதுமை மா, ஏற்கனவே நடைமுறையில் இருந்த விலைக்கே பேக்கரிகளுக்கு வழங்கப்பட்டது என்றும் -

எனவே, பாணின் விலையை இரண்டு ரூபாவால் அதிகரிக்க வேண்டிய அவசியம் தற்போது இல்லை என்றும் - அரச அதிபர் மேலும் கூறினார்.

பிறிமா நிறுவனம் ஒரு கிலோ கிராம் கோதுமை மாவின் விலையை 4 ரூபாவால் அதிகரித்ததை அடுத்து நாடளாவிய ரீதியில் பாணின் விலை 2•ரூபாவால் உயர்த்தப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக கேட்டபோதே அரச அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# ஐ.தே.கட்சிக்குள் குழப்பம்!

## ஆளும் தரப்போடு இணக்கப்பாட்டுக்கு வந்த விவகாரத்தில்

கொழும்பு,ஒக்.7

ஐக்கிய தேசியக் கட்சியின் இரண்டாம் வரிசைத் தலைவர்கள், ஆளும்கட்சியோடு சேர்ந்து இயங்குவதற்கு இணக்கம் கண்டிருப்பதை அடுத்து அக்கட்சிக்குள் குழப்பமும், முரண்பாடுகளும் தலைதூக்கியிருக்கின்றன என விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

ஒன்றுபட்டுச் செயற்படுவதற்கு தென்னிலங்கையின் இரண்டு பெரும் பிரதான கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் வரலாற்று முக்கியத்துவம் மிக்க தீர்மானத்தை எடுத்திருக்கின்றன என்று நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டமை தெரிந்ததே.

இந்த அறிவிப்பே ஐ.தே.கட்சிக்குள் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது

இந்த முடிவுக்கு ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆசீர்வாதம் இன்னும் கிடைக்க வில்லை என்றும் தெரிகின்றது.

தற்போது ஆஸ்திரேலியா சென்றிருக்கும் ரணில் விக்கிரமசிங்க விரைவில் நாடு திரும்பியதும் இவ்விவகாரம் குறித்து திட்டவட்டமான சில முடிவுகளை எடுத்து இராஜதந்திரமாகக் காய்நகர்த்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கட்சியின் இரண்டாம் நிலைத் தலைவர்களே, ஆளும் தரப்புடன் சேர்ந்து இணங்கிச் செயற்பட வேண்டும் என்ற முடிவில் பிடிவாதமாக இருக்கின்றார்கள். அவர்களே இவ்விகாரம் தொடர்பாக ஆளும் தரப்புடன் பேச்சு நடத்திய ஐ.தே.கட்சிக் குழுவிலும் இடம்பெற்றுமிருந்தனர்.

கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய, புதிய தவிசாளர் ருக்மன் சேனநாயக்க, பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், மிலிந்த மொறகொட, ராஜித சேனாரத்ன, ரவி கருணநாயக்க, ரஞ்சித் மத்தும பண்டார, ஹேமகுமார நாணயக்கார, பந்துல குணவர்த்தன, நவீன் திஸநாயக்க உட்பட சுமார் இருபது எம்.பிக்களும், கட்சிப் பிரமுகர்களும் ஆளும் தரப்புடன் ஐ.தே. கட்சி இணங்கிப் போக வேண்டும் என்பதில் பிடிவாதமாக இருக்கின்றனர்.

ஆளும் தரப்புடன் இவ்விவகாரம் தொடர்பாகப் பேச்சு நடத்திய குழுவில் இடம்பெற்றிருந்த ஜோன் அமரதுங்க மற்றும் மஹிந்த விஜேசேகர, தி. மகேஸ்வரன் போன்றோர் ஆளும் தரப்புடன் ஐ.தே.கட்சி இணங்கிப் போவதைக் கடுமையாக எதிர்க்கின்றனர் எனத் தெரிகின்றது.

தங்களது இந்த நிலைப்பாட்டுக்குக் கட்சித் தலைவர் உட்பட, நாற்பதுக்கும் குறையாத எம்.பிக்களின் முழு ஆதரவு இருப்பதாகவும் இந்தக் குழுவினர் கூறுகின்றனர்.

அரசுடன் ஐ.தே.க. இணங்கிப் போகின்ற விடயம் தொடர்பாக, ஐ.தே.கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தலைமையிலான கட்சியின் பிரதிநிதிகள் குழுவுக்கும், பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தலைமையிலான அரசுப் பிரதிநிதிகள் குழுவுக்கும் இடையில் நான்கு சுற்றுப் பேச்சுகள் நடந்தன. அதன் முடிவிலேயே இணக்கத்துக்கான உடன்பாடு எட்டப்பட்ட தாக நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது.

இவ்விடயத்தை ஐ.தே.கட்சியின் செயற்குழுவிலும், நிறைவேற்றுக் குழுவிலும் சமர்ப்பித்து கட்சியின் அங்கீகாரம் பெறப்படும் என ஐ.தே.கட்சி ஏற்கனவே அறிவித்திருக்கின்றது.

இவ்விடயம் கட்சியின் மேற்படி இரு கூட்டங்களுக்கும் வரும்போது பெரும் கருத்து மோதல் வெடிக்கும் என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. கட்சி இதனால் துண்டுபட்டாலும் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை என்கின்றன அந்தத் தரப்புகள்.

**அதிருப்தியாளர்கள் கருத்து இது**

''அரசிடம் ஒரு தொகை அமைச்சுப் பதவிகளைப் பெறலாம் என்ற நப்பாசையில் கட்சியின் மூத்த தலைவர்கள் சிலர் இத்திட்டத்துடன் ஓடித் திரிகின்றனர். மற்றும் சிலர் கடந்த ஆட்சிக் காலங்களில் தாங்கள் புரிந்த ஊழல்கள் அம்பலமாவதைத் தவிர்ப்பதற்காக அரசுடன் ஒட்டிக் கொள்ள நினைக்கின்றனர். தனித்துப் போனால் தங்கள் குத்துக்கரணம் அம்பலமாகி விடும் என்பதால், 'தேசிய நலன்' என்ற பம்மாத்தை வெளிப்படுத்தி அந்தச் சாக்கில் முழுக் கட்சியையுமே அரசிடம் அடகு வைத்து பதவி சுகம் பெறத் துடியாய்த் துடிக்கிறார்கள். அமைச்சர் பதவிகளை ஏற்காமல் - அரசில் சேராமல் - வெளியிலிருந்த படியே தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள், நல்லாட்சி, தேர்தல் சீர்திருத்தம், இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சி, பொருளாதார சீரமைப்பு போன்றவற்றில் அரசுக்கு ஒத்துழைக்கலாம். அப்படிச் செய்யலாம் என்றால் அதற்கு இவர்கள் இணங்க மாட்டார்கள். ஏனென்றால், பதவியும், அதிகாரமும்தான் இவர்களின் ஒரே குறி. பத்துப் பதினைந்து பேரின் அமைச்சுப் பதவி ஆசைக்காக கட்சியின் தனித்துவத்தைப் பறிகொடுக்க - பலிகொடுக்க - முடியாது.'' - என்றார் தற்போதைய இணக்கப்பாடு பற்றிய அறிவிப்பை எதிர்க்கும் ஐ.தே.கவின் மூத்த பிரமுகர் ஒருவர். (உ)

## இரு கட்சி இணக்கப்பாடு குறித்து சிரேஷ்ட அமைச்சர்கள் குமைச்சல்

பொது உடன்பாடு ஒன்றின் கீழ் செயற்படுவதற்கு அரசும், பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சியும் தீர்மானித்துள்ளன என வெளியாகியுள்ள தகவல்களை அடுத்து இந்த விவகாரம் அரசின் சிரேஷ்ட அமைச்சர்கள் சிலருக்கு கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிய வருகின்றது.

அரசுடன், ஐக்கிய தேசியக் கட்சி இணைந்து செயற்படும் போது ஐ.தே.கட்சி பிரமுகர்களுக்கு இடமளிப்பதற்காக அமைச்சுப் பொறுப்புகள் பகிரப்பட வேண்டிய கட்டாயத் தேவை எழுந்துள்ளது. இதற்காக அமைச்சரவை மறுசீரமைப்பு ஒன்று இடம்பெறுவதும் தவிர்க்க முடியாதது. இந்நிலையில் அந்த அமைச்சரவை மறுசீரமைப்பின்போது தமது தற்போதைய அமைச்சுப் பொறுப்புகள் சில பறிபோகலாம் என அஞ்சும் அமைச்சர்கள் சிலரே இவ்வாறு கடும் அதிருப்தியடைந்துள்ளனர் எனத் தெரிகின்றது.

முன்னதாக, இரு பிரதான கட்சிகளுக்கிடையில் புரிந்துணர்வு ஏற்படுத்தும் பேச்சுகள் குறித்தும் இந்த சிரேஷ்ட அமைச்சர்கள் தமது அதிருப்தியைத் தெரிவித்து வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ)

## மஹிந்த - ரணில் செய்வாயன்று சந்திப்பு அதன்பின்பே உடன்பாடு இறுதியாகுமாம்

கொழும்பு, ஒக்.7

ஸ்ரீல.சு.க - ஐ.தே.க இடையிலான உத்தேசப் புரிந்துணர்வு ஒப்பந்தம், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் ஐ. தே. க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் நேரடியாகச் சந்தித்துப் பேச்சு நடத்திய பின்னரே கைச்சாத்தாகுமென ஐ. தே. கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க எம். பி. நேற்று தெரிவித்தார்.

இச்சந்திப்பு பெரும்பாலும் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை 10 ஆம் திகதி நடைபெறலாமெனவும் அவர் தெரிவித்தார்.

ஸ்ரீல.சு.க - ஐ.தே.க. பேச்சுகளின்போது ஆறு விடயங்கள் தொடர்பாக ஆராய உப குழுக்கள் நியமிக்கப்பட்டன. இக்குழுக்கள் தமது அறிக்கைகளை வெளியிட்டபின்னர் இருதரப்புகளும் இந்த ஆறு விடயங்களிலும் இணைந்து செயற்பட முடிவு செய்தன.

- இனப்பிரச்சினைக்குத் தீர்வு.
- தேர்தல் முறை மறுசீரமைப்பு.
- திறமையான அரச நிர்வாகம்.
- பொருளாதார அபிவிருத்தி.
- தேசத்தைக் கட்டியெழுப்புவது. (கல்வி மறுசீரமைப்பு)
- சமூக அபிவிருத்தி.

மேற்கண்ட விடயங்களில் இருதரப்பும் இணைந்து செயற்படவுள்ளன.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு முன்னர் ஐ. தே. கட்சியின் செயற்குழுவுக்கும் நாடாளுமன்றக்குழுவுக்கும் இவ்விடயம் குறித்து விளக்கமளிக்கப்படுமெனவும்திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.(உ)

# அமைச்சரவையில் நாற்பது வீதத்தை ஐ.தே.கவுக்கு வழங்க அரசு முடிவு!

### இணக்கம் வருமானால் 15 அமைச்சர்கள், 15 பிரதியமைச்சர்கள் அக்கட்சிக்கு

கொழும்பு, ஒக்.7

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களில் ஒன்றுபட்டு செயற்படுவதற்கு அரசும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணங்கியுள்ளமையை அடுத்து அமைச்சரவை மறுசீரமைப்பு ஒன்றை மேற்கொள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார் என நம்பகரமாகத் தெரியவருகின்றது.

வரவு - செலவுத்திட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் இந்த அமைச்சரவை மறுசீரமைப்பு இடம்பெறலாமெனத் தெரிகிறது.

அரசுடன் இணைந்து செயற்படும்போது ஐக்கிய தேசியக் கட்சிக்கு முக்கிய அமைச்சுப் பொறுப்புகளை வழங்குவதற்கு அரச [illegible] தீர்மானித்துள்ளது. இதன்படி அமைச்சரவையில் நாற்பது வீத இட ஒதுக்கீடு ஐக்கிய தேசியக் கட்சிக்கு வழங்கப்படலாம் எனத் தெரிகின்றது.

உத்தியோகப்பற்றற்ற தகவல்களின்படி பதினைந்திற்கும் மேற்பட்ட அமைச்சுப் பொறுப்புகளும் அதே எண்ணிக்கையான பிரதி அமைச்சுப் பொறுப்புகளும் ஐக்கிய தேசியக்கட்சிக்கு வழங்கப்படலாம் எனத் தெரிகின்றது.

அமைச்சரவை மறுசீரமைப்பு குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமது கட்சியின் மூத்த உறுப்பினர்களுடன் நேற்றுமுன்தினம் இரவு நீண்ட மந்திராலோசனை நடத்தியிருக்கின்றார்.

அமைச்சரவை மறுசீரமைப்பு குறித்து ஐ. தே. க. தலைவருடன் பேச்சு நடத்தவும் ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் என அரச உயர்மட்ட வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

## தென்னிலங்கை இணக்கப்பாட்டால் இலங்கைத் தீவுக்கு நன்மை கிட்டுமா?

தென்னிலங்கையின் இரு பெரும் கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் சரித்திரபூர்வ இணக்கப்பாடு ஏற்பட்டிருப்பதாகத் தென்னிலங்கை ஊடகங்கள் ஆர்ப்பரித்து நிற்கின்றன.

இரண்டு பிரதான கட்சிகளும் சேர்ந்து நாட்டின் இனப்பிரச்சினைக்குப் பொது இணக்கப்பாட்டு அணுகுமுறை ஒன்றை முன்வைக்கப் போகின்றன என்றும் -

இரு கட்சிகளும் இணைந்து அரசு ஒன்றை முன்னெடுக்கப் போகின்றன என்றும் கூட பேசப்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்ந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசு இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஒன்றுபட்ட யோசனையை முன்வைக்கும் எனவும் -

விடுதலைப் புலிகளுடன் அரசு நடத்தக் கூடிய அடுத்த சுற்று சமாதானப் பேச்சின்போது அரசுக் குழுவில் ஐ.தே. கட்சியின் பிரமுகர்களும் இடம்பெற்றிருப்பார்கள் எனவும் கூட, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு நெருக்கமான வட்டாரங்கள் நம்பிக்கை வெளியிடுகின்றன.

தென்னிலங்கை அரசியலில் ஏற்பட்டுள்ள இந்தத் திடீர்த் திருப்பம் - பெரும் அரசியல் தலைகீழ் மாற்றம் - இலங்கையின் எதிர்கால சரித்திரத்தைப் புரட்டி எழுதும் வாய்ப்பை ஏற்படுத்தியிருப்பதாகவும் சில அவதானிகள் கூறுகின்றனர்.

இவையெல்லாம் பேச்சுக்கு நன்றாகத்தான் இருக்கின்றன.

தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு நீதி, நியாயமான தீர்வு ஒன்றை வழங்குவதில் தமக்குள் ஒத்திசைவும், ஒருமித்த போக்கும் கொண்டிராத - இது விடயத்தில் இட்டு நிரப்ப முடியாத இடைவெளியையும், முரண்பாடுகளையும் கொண்ட- தென்னிலங்கை அரசியல் சக்திகள், தமக்கிடையேயான இந்த வேறுபாடுகளைக் களைந்துவிட்டு, ஒதுக்கித் தள்ளிவிட்டு, தீர்வு ஒன்றைக் காணும் நல்லெண்ணத்துடன் ஐக்கியப்பட்டு வருமானால், அதை இலங்கைத் தீவுக்கு விடிவு பிறந்து விட்டதாகவே அர்த்தப்படுத்த வேண்டும்.

ஆனால், இந்தப் பெரும்பான்மைக் கட்சிகளின் ஒட்டுறவும், இணக்கப்பாட்டு முயற்சிகளும் அதிகாரத்தைத் தக்கவைப்பதையும், பதவிக் கதிரைகளை எட்டிப் பிடிப்பதையும் மட்டுமே உள்நோக்கமாகக் கொண்டவை என்று வெளியாகும் உள்வீட்டுத் தகவல்கள், இந்த முயற்சிகளால் நாட்டுக்கு விடிவு பிறக்கும் என்ற நம்பிக்கையைத் தகர்க்கின்றன.

அரசைத் தக்கவைப்பதற்கான நாடாளுமன்றப் பெரும்பான்மைக்கு பௌத்த - சிங்கள மேலாதிக்கப் போக்குடைய ஜே.வி.பியில் இதுவரை தங்கியிருந்தது ஆளும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி.

இப்போது ஆளும் கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையில் 'லடாய்' உச்சக் கட்டத்தை அடைந்துவிட்டது. இந்நிலையில் அரசைக் கொண்டு நடத்துவதற்கு நாடாளுமன்றில் போதிய பலமின்றித் தடுமாறும் அரசுக்கு, எப்படியாவது பிரதான எதிர்க் கட்சியான ஐ.தே.கட்சியை வளைத்துப்போட வேண்டிய இக்கட்டு; மிக அவசர தேவை.

அதேவேளை, எதிர்க்கட்சி வரிசையில் இருந்தால் நீண்ட காலத்துக்கு அமைச்சர் பதவியோ, ஆட்சியில் பங்கோ கிடைக்காது என்ற ஆதங்கம் ஐ.தே.கட்சியின் பல மூத்த பிரமுகர்களுக்கு.

இந்த அவசரமும், ஆதங்கமும் ஒன்று சேர, சந்தர்ப்பவாத ஐக்கியப்பாட்டுக்கு - அந்தரங்கத் தேவையின் நிமித்தமான இணக்கப்பாட்டுக்கு - இரு தரப்பும் இப்போது வந்திருக்கின்றன என்கின்றன உள் வீட்டுத் தகவல்கள்.

இந்த 'சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இணக்கத்துக்கு' (?), ஐ.தே.கட்சித் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவின் 'ஆசீர்வாதம்' இன்னும் கிடைக்கவில்லை. அவர் ஆஸ்திரேலியாவில் தங்கி நிற்க, அடுத்த வரிசைக் கட்சித் தலைவர்கள் அவரது விருப்புக்கு மாறாக - அவருக்குக் குழி பறிக்கும் விதத்தில் - இவ்வாறு ஆளும் தரப்புடன் ஒன்றுபட்டு செயற்படும் இணக்கப்பாட்டுக்கு வழி செய்து விட்டனர் என்றும் தெரிகின்றது.

கட்சிக்குள் பலம் வாய்ந்த சக்திகளான தாங்கள் இந்த முடிவை எடுத்திருப்பதால் வேறுவழியின்றி கட்சித் தலைவரும் இம்முடிவுக்குக் கட்டுப்பட்டு - இழுபட்டு வந்து - இணங்கித்தானாக வேண்டும் என இந்த இரண்டாம் வரிசைத் தலைவர்கள் கருதுகின்றார்களாம்.

ஆனால், ரணில் விரைவில் நாடு திரும்பி, கட்சிக்குள் தமது உடும்புப்பிடியை மேலும் வலுப்படுத்தும்போது இந்த விடயத்தில் கட்சிக்குள் தெறிப்பும் முறிவும் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்றும் கூறுப்படுகின்றது.

இந்நிலையில், தமது விருப்பத்துக்கு மாறாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசுடன் இணங்கி, அமைச்சர் பதவிகளைப் பெற்று, ஆளும் தரப்புடன் ஐக்கியமாவதற்கு முண்டியடிக்கும் ஐ.தே.கட்சியினரை கட்சியிலிருந்து விடைகொடுத்து அனுப்பவும் ரணில் தயாராகவும், உறுதியாகவும் உள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

அப்படி நேர்ந்தால் அறுபத்து மூன்று எம்.பிக்களைக் கொண்ட ஐ.தே.கட்சியிலிருந்து மேலும் 15 முதல் இருபது எம்.பிக்கள் அரசுப் பக்கம் மாறும் நிலைமை வரும். வந்த அளவில் வாசி என்று ஜனாதிபதி மஹிந்தர் மகிழவேண்டியதுதான்.

நாட்டின் தேசியப் பிரச்சினைக்கு நீதியான - நியாயமான - நின்று நிலைக்கக் கூடிய - நிரந்தர - தீர்வு ஒன்றைக் காணும் நோக்குடனும், அதற்காக ஒத்திசைந்து செயற்படும் பற்றுறுதியோடும், தனிப்பட்ட பதவி ஆசைகளை விடுத்து நாட்டின் நலனே முக்கியம் என்ற திடசங்கற்பத்துடனும் பிரதான கட்சிகளிரண்டும் ஒன்றுபட்டு செயற்பட முன்வருமானால் அது வரவேற்கத்தக்கதே.

அந்த நோக்கு இல்லாதவரை இத்தகைய இணக்கப்பாடுகளால் நன்மை ஏதும் நாட்டுக்கு விளைந்து விடப் போவதில்லை என்பது மிகவும் உறுதியாகும்.

## வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் இலக்கிய நூல் பரிசில் பெறும் எழுத்தாளர்கள்

### இம்மாதம் 16ஆம் திகதி திருகோணமலையில் கௌரவிப்பு விழா

யாழ்ப்பாணம்,ஒக்.7

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் இலக்கிய நூல் பரிசு பெறுவோர் விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

2004 மற்றும் 2005 ஆம் ஆண்டுகளில் வெளியாகி பரிசில் பெறும் நூல், நூலாசிரியர் பெயர், துறை பற்றிய விவரங்கள் வருமாறு:-

**2004 இல் பரிசில் பெறும் நூல்கள்**

✱ **கவிதை:-** ''ஓவியம் வரையாத தூரிகை'' - ஜனபா, இஸ்ஸத் ரிஹானா (அனார்), ''கைகளுக்குள் சிக்காத காற்று'' - த.ஜெயசீலன்.

✱ **சிறுகதை:-** ''எங்கே மனக்கண்ணையும் திறவுங்கள்'' - ஆதித்தநிலா.

✱ **நாவல்:-** ''வெள்ளாவி'' - விமல் குழந்தைவேல்,

✱ **நாடகம்:-** ''இமயம்'' அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை.

✱ **பல்துறை:-** ''பஞ்சமரும் சமூகத் தொடர்பும்'' - அருட்திரு. பென்ஜமின் ஜெயராசா, ''ஆழியவளை'' - கந்தசாமி முத்துராசா, ''தமிழ் எழுத்தின் தோற்றம்'' - கலாநிதி ப.புஸ்பரட்ணம், ஈழத்துக் கலைத்துறைப் பதிவுகள்'' - எஸ்.சிவானந்தராசா.

✱ **உயர்கல்வி:-** ''ஆசிரிய முகாமைத்துவம்'' - மா.சின்னத்தம்பி, “முகாமைத்துவத்திற்கான தகவல் தொழில் நுட்பம்'' - வே.ஈஸ்வரன்.

✱ **இலக்கிய ஆய்வும் விமர்சனமும்:-** ''டானியலின் எழுத்துக்கள்'' - கலாநிதி செ.திருநாவுக்கரசு, ''ஈழத்துத் தமிழ் நாவல்களில் சமூதாயச் சிக்கல்கள்'' - கலாநிதி ம.இரகுநாதன்.

✱ **சிறுவர் இலக்கியம்:-** ''மாவீரன் புள்ளிமான்'' - ஒ.கே.குணநாதன்.

**2005 இல் பரிசில் பெறும் நூல்கள்**

✱ **சிறுவர் இலக்கியம்:-** ''வாழ நினைத்தால் வாழலாம்'' - சோ.ராமேஸ்வரன்.

✱ **கவிதை:-** ''நினைவுச் சுவடுகள்'' சோ.பத்மநாதன், “தனித்துத் திரிதல்'' த. மலர்ச்செல்வன்.

✱ **உயர்கல்வி:-** ''இலங்கையின் முகாமைத்துவக் கல்வி'' - மா.சின்னத்தம்பி.

✱ **பல்துறை:-** ''மட்டக்களப்பு வரலாறு'' - வெல்லவூர்க் கோபால், “20ஆம் நூற்றாண்டு உலக இலக்கியம்'' - ஐ. சாந்தன், ''செய்தித் தலைப்புகள் ஓர் அறிமுகம்'' - அருள்திரு. ரூபன்மரியாம் பிள்ளை.

✱ **இலக்கிய ஆய்வும் விமர்சனமும்:-** ''சீர்மைத்த சிற்பி'' - அருட் திரு.சி.ஜே. அன்ரனிபாலா.

✱ **நாடகம்:-** ''நீலாவணன் கவிதை நாடகம்'' - நீலாவணன், ''அயோத்தி மன்னன்'' - ஒ.கணபதிப்பிள்ளை.

✱ **சிறுகதை:-** ''அகதி அரிசி'' - தையிட்டி அ.இராசதுரை.

✱ **நாவல்:-** ''பெரிய மரைக்கார் சின்னமரைக்கார்'' - ஜனைதா ஷெரீப்.

## மாகாண ஆளுநர் விருது பெறுவோர் விவரம்

யாழ்ப்பாணம்,ஒக்.7

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை அமைச்சின் 'ஆளுநர் விருது - 2005' பெறுவோர் விவரம் வெளியிடப் பட்டுள்ளது.

பிரான்சிஸ் சவேரியான் லெம்பேட், அருணா செல்லத்துரை, செ.சிவப்பிரகாசம், பொன். தெய்வேந்திரன், பொ. கந்தையா, திருமதி இராசேஸ்வரி தட்சணாமூர்த்தி, மு.கோபாலகிருஷ்ணன், ஜனாப் யூ.எல்.ஆதம்பாவா, த.நல்லலிங்கம் ஆகியோரே ஆளுநர் விருது பெறத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை அமைச்சின் ஏற்பாட்டில் எதிர் வரும் 16ஆம் திகதி திருகோணமலை உவர்மலை விவேகானந்தாக் கல்லூரியில் நடத்தப்படவுள்ள தமிழ் இலக்கியப் பெருவிழாவில் 'ஆளுநர் விருது' பெறுவோருக்குரிய கௌரவமும் இலக்கிய நூல் பரிசில் பெறும் கலை, இலக்கிய கர்த்தாக்களுக்கான பரிசில் வழங்கலும் இடம்பெறும்.

சம்பந்தப்பட்டவர்கள் நேரில் வருகை தந்து தமக்குரிய கௌரவத்தைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்றும் -

திருகோணமலைக்கு வருகைதரும் இலக்கிய கர்த்தாக்களுக்கு தங்குமிடம், உணவு வசதிகள் செய்யப்பட்டுள்ளன என்றும் -

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் திருமதி என். ஸ்ரீதேவி அறிவித்துள்ளார்.

மேலதிக விவரங்களுக்கு 026 222 0036 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளமுடியும் என்றும் -

'ஆளுநர் விருது - 2006' பெறுவோர் விவரம் பின்னர் வெளியிடப்படும் என்றும் - அவர் மேலும் தெரிவித்தார்.

## இரும்புப் பெட்டகத்தை கையளிக்க உத்தரவு

தென்மராட்சி,ஒக்.7

கொடிகாமம் பொலீஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த வரணி சமூர்த்திச் சங்க வங்கியின் இரும்புக் காப்புப் பெட்டகம் தென்மராட்சிப் பிரதேச செயலாளர் முன்னிலையில் வங்கி உத்தியோகத்தர்களிடம் கையளிக்குமாறு சாவகச்சேரி நீதிவான் பொலீஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஓகஸ்ட் 11 ஆம் திகதி இடம்பெற்ற யுத்தத்தின்போது வரணிப் பகுதி மக்கள் இடம்பெயர்ந்த பின்னர் அண்மையில் சமூர்த்தி வங்கிக்குச் சென்ற வங்கி உத்தியோகத்தர்கள் இரும்புக் காப்புப் பெட்டகம் திருடர்களால் சேதமாக்கப்பட்ட நிலையில் காணப்பட்டதால் பொலீஸாரால் கொண்டு செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## அரச வைத்தியசாலைகளின் எரிபொருள் நிலைமையைச் சீராக்குவதற்கு நடவடிக்கை

### சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் விளக்கம்

யாழ்ப்பாணம்,ஒக்.7

ஏதாவது ஒரு வைத்தியசாலையில் எரிபொருள் தட்டுப்பாடோ அல்லது உலர் உணவுத் தட்டுப்பாடோ ஏற்படும் போது நாம் அப்பகுதிக்குரிய பிரதேச செயலாளரின் ஒத்துழைப்புடன் அவற்றைத் தீர்க்க நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

தொழில்நுட்பக் காரணங்களுக்காகவும், தற்போதுள்ள சூழ்நிலையைக் கருத்திற்கொண்டும் எரிபொருளை சிக்கனமாகப் பாவிக்கும் நோக்குடனும் தொடர்ச்சியாக இரவு முழுவதும் மின் பிறப்பாக்கியை இயக்க முடியாது.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன்.

30.09.2006 ஆம் திகதிய உதயனில் ''மின் பிறப்பாக்கியைப் பயன்படுத்த மேலதிக டீசல் தேவைப்படுகிறது; பருத்தித்துறை வைத்திய அதிகாரி விடுத்துள்ள கோரிக்கை'' என்ற தலைப்பிலும் -

04.10.2006 ஆம் திகதிய உதயனில் ''விளக்கொளியில் இரவு சேவைகள்; பரு. வைத்தியசாலையின் நிலைமை'' என்ற தலைப்பிலும் -

வெளியான செய்திகள் குறித்து விளக்கம் அளித்து அனுப்பி உள்ள அறிக்கையிலேயே பிரதி மாகாணப் பணிப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்.மாவட்டத்தில் உள்ள அம்புலன்ஸ் வண்டிகள், மின் பிறப்பாக்கிகள் உள்ள வைத்தியசாலைகளில் எந்தவொரு அனர்த்த கால சூழ்நிலையையும் எதிர்கொள்ளும் நோக்குடன், முன்கூட்டியே தேவையான எரிபொருள் சேமித்து வைக்கப்பட்டிருந்தது. ஆகையினால் ஓகஸ்ட் 11ஆம் திகதி முதல் ஏற்பட்ட சூழ்நிலையின் பின்னர் எமது வைத்தியசாலைகளில் இருந்த எரிபொருள் கையிருப்பைக் கொண்டு அம்புலன்ஸ் தேவைகளையும், மின்பிறப்பாக்கிக்கான விநியோகத்தையும் வழங்க முடிந்தது.

யாழ்.மாவட்டத்தில் எரிபொருள் விநியோகிக்கப்பட்ட பொழுது அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள் ஆகியோருடன் கலந்துரையாடி எமது வைத்தியசாலைகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் எரிபொருளை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் சகல வைத்தியசாலைகளிலும், எமது சேவைகளை சீராக வழங்கக்கூடியதாகவுள்ளது.

**இரவு முழுவதும் மின்பிறப்பாக்கியை இயக்க முடியாது**

தங்களது பத்திரிகையில் வந்த செய்தி தொடர்பாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையுடன் தொடர்புகொண்ட போது தற்போது 700 லீற்றர் டீசல் கையிருப்பில் இருந்ததை உறுதிப்படுத்தக்கூடியதாகவுள்ளது. ஏதாவது ஒரு வைத்தியசாலையில் எரிபொருள் தட்டுப்பாடோ அல்லது உலர் உணவுத் தட்டுப்பாடோ ஏற்படும் போது நாம் அப்பகுதிக்குரிய பிரதேச செயலாளரின் ஒத்துழைப்புடன் அவற்றைத் தீர்க்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

தொழில்நுட்பக் காரணங்களுக்காகவும், தற்போதுள்ள சூழ்நிலையை கருத்திற்கொண்டும், எரிபொருள் சிக்கனமாக பாவிக்கும் நோக்குடனும் தொடர்ச்சியாக இரவு முழுவதும் மின் பிறப்பாக்கியை இயக்க முடியாது. ஆயினும் நோயாளர்களுக்கான அவசர சிகிச்சைகளின் போதும், சத்திர சிகிச்சைகளின் போதும் வைத்தியசாலைகளில் குளிரூட்டிகளில் வைக்கப்பட்டுள்ள மருந்துகளினை பாதுகாக்கும் நோக்குடனும் திட்டமிட்ட முறையில் குறிக்கப்பட்ட கால இடைவெளிகளில் எமது வைத்தியசாலைகளில் மின் பிறப்பாக்கிகள் இயக்கப்பட்டு வருகின்றன என்பதனை தெளிவுபடுத்த விரும்புகிறேன் - என்று உள்ளது.

## இம்முறை 17ஆயிரம் மாணவர் பல்கலை. அனுமதி பெறுவர்

### மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு,ஒக்.7

நேற்றுமுன்தினம் வெளியான ஜி.சீ.ஈ. உயர்தரப் பெறுபேறுகளின் பிரகாரம் இவ்வருடம் 17ஆயிரம் மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர் என பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

புதிய மாணவர்களைப் பல்கலைக் கழகங்களில் இணைத்துக் கொள்ளும் நடைமுறைகள் அடுத்த வாரம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன என்றும் -

அடுத்த வாரமளவில் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்குக் கிடைக்கும் என்று எதிர்பார்ப்பதாகவும் - ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பப் படிவங்கள் மற்றும் பல்கலைக்கழக அனுமதி நடைமுறை தொடர்பான விசேட கையேடுகள் அடுத்தவாரமளவில் வெளியிடப்படும் என ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

புதிதாகச் சேர்க்கப்படவுள்ள பல்கலைக்கழக மாணவர்களுக்கான கல்வி சார் நடவடிக்கைகள் அடுத்த வருடம் முதல் காலாண்டில் ஆரம்பமாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூவருக்கு குருக்கள் அபிஷேகம்

செபமாலைதாசர் சபையைச் சேர்ந்த மூன்று அருட்பணியாளர்கள் யாழ்.மரியன்னை ஆலயத்தில் யாழ்.ஆயர் மேதகு சௌந்தரநாயகம் ஆண்டகையால் குருக்களா திருநிலைப்படுத்தப்பட்டார்கள். அருட்பணியாளர்கள் லா.யூ.றெஜினோல்ட், ம.அருள்தாஸ், ம.லியோனிஸ் ஆகியோர்களே குருக்களாகத் திருநிலைப்படுத்தப்பட்டவர்களாவா. (ப-51)

## பின்னுறுதித் தீர்வை
## யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

சுகுணராஜ் பெண் சிவமலர்
25, மானிப்பாய் றோட்,
ஜின்னா லேன், யாழ்ப்பாணம்.
வழக்காளி

வழ.இல.மண நீக்கம்/685

எதிராக
கணபதிப்பிள்ளை சுகுணராஜ்
சந்நிதி றோட்,
வருணன், அச்சுவேலி
எதிராளி

இவ் வழக்கு 2006 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 26 ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற நீதிபதி திரு.இ.த.விக்னராஜா அவர்கள் முன்னிலையில் வந்த போது வழக்காளியும் வழக்காளி சார்பில் பதிவுபெற்ற சட்டத்தரணி திருமதி லிங்காதுரைராஜா அவர்களும் பிரசன்னமாகியிருக்க மன்றின் கட்டளைப்படி எதிராளிக்கு அழைப்புக் கட்டளை 29.07.2006 ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் பிரசுரித்து பதில் சேவகம் செய்யப்பட்டு 25.08.2006 இல் மன்றில் கூப்பிடப்பட்ட போது எதிராளி சமுகமின்மையால் இவ்வழக்கு ஒரு முக விளக்கத்திற்கு நியமிக்கப்பட்டதற்கமைய இன்று ஒருமுக விளக்கத்திற்கு எடுக்கப்பட்டு வழக்காளியின் சாட்சியத்தை நெறிப்படுத்த மன்றின் அனுமதியைக் கோரி மன்றின் அனுமதியுடன் வழக்காளியின் சாட்சியம் நெறிப்படுத்தப்பட்ட பின்னர் வழக்காளியின் பிராது வ1 ஆவணம் வழக்காளி இன்று மன்றில் அளித்த சாட்சியம் ஆகியவற்றை வழக்கேட்டுடன் சேர்த்து பரிசீலித்து வழக்காளி பிராது கோரிய நிவாரணங்களை பெறத் தகுதியுடைவர் எனக்கண்டு பின்வருமாறு கட்டளையிட் டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையே 22.10.2003 இல் நிறைவேறிய பதிவுத் திருமணத்தை எதிராளி வழக்காளியுடன் கூடி வாழும் எண்ணமின்றி வழக்காளியை வன்மஉறவறுப்பு செய்த காரணத்திற்காக இத்தால் இரத்து செய்து வெற்றும் வெறிதுமானதெனக் கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத் தீர்ப்புக்கமைய வழக்காளி தனது கன்னிப்பெயரான சச்சிதானந்த சிவம் மகள் சிவமலர் என்ற பெயரை முற்றான தீர்வையின் பின் பாவித்து வரலாம் என்று கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இப்பின்னுறுதித்தீர்வையின் பிரதி உதயன் தேசிய தினசரிப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தல் மூலம் எதிராளிக்கு பதில் சேவகம் செய்யப்பட்ட திகதியில் இருந்து மூன்று மாத காலத்திற்குள் எதிராளி எதுவித நடவடிக்கையும் எடுக்கத் தவறும் பட்சத்தில் விதிக்கப்பட்டகாலம் முடிவடைந்ததும் இப்பின்னுறுதித்தீர்வையானது முற்றான தீர்வையாக்கப்படும் எனக் கட்டளை யிடப்படுகின்றது.

2006 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 26 ஆம் திகதி

இ.த.விக்னராஜா
மாவட்ட நீதிபதி

வரைந்தது
லிங்காதுரைராஜா
வழக்காளியின் சட்டத்தரணி

நீதிமன்றின் கட்டளைப்படி
து.சிறீமோகன்,
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்,யாழ்ப்பாணம்.

(54190)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
13 - 04 - 1930



மறைவு
07 - 09 - 2006

### திருமதி திரவியம் இராசதுரை

*அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாக வாழ்ந்த - உங்கள்*
*அன்பு முகம் என்றும் நீங்கவில்லை*
*அழியாத நினைவலைகள் - எம்*
*மனதை விட்டகலவில்லை*
*அன்போடு எம்மை வளர்த்த - எம்*
*பாசமிகு அன்னையே!*
இன்று உங்கள் ஆத்மா சாந்திபெற - நாம்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

44/6, மணிக்கூட்டு வீதி
யாழ்ப்பாணம்.
-குடும்பத்தினர்.


### Organ / Violin Notes

Organ இசைக்கருவிகளுக்கான ஆரம்பப் பயிற்சிப் புத்தகங்களும், சினிமாப்பாடல்களுக்கான இசைக்குறிப்புகளும் விற்பனைக்குண்டு. எல்லா இசைக்கருவிகளுக்கும் ஏற்றவை.

**கரவீணா இசைமன்றம்**
131, கோயில்வீதி, நல்லூர்.
(நல்லூர் ஆலயத்திலிருந்து 500M தெற்கே)
(54106)

### வீடு, கடை வாடகைக்கு

ஜீ.பி.எஸ் வீதி கல்வியங்காட்டில் வீடு, கடை என்பன வாடகைக்கு உண்டு.
தொடர்பு: S.காண்டீபன்,
ஜீ.பி.எஸ் வீதி,
கல்வியங்காடு.
T.P:2228203
(54189)

### COMPUTER COURSES @ SPEED IT NET

"இன்ரநெட்-ஈமெயில் பயிற்சிநெறி"
கட்டணம் 1000 ரூபா (அனுமதிக்கட்டணம் இல்லை)

Basic computing, Visual Basic, Web Designing, photo Shop, Hard ware கற்கை நெறிகள் தனிப்பட்ட முறையில் கற்பிக்கப்படுகின்றன.
இன்ரநெட், ஈமெயில், A/L Result, US VISA....

72/28, பணிக்கர் லேன் (பலாலி வீதி உட்புறம்)
(ATI அருகில்) திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 4591871, speeditnet.com


## ஒரு வாகனம் மட்டுமே போக்குவரத்துக்கு!

மண்டைதீவு, ஒக்.7

யாழ்ப்பாணம் - மண்டைதீவுப் பகுதிக்கான போக்குவரத்து சேவையில் தற்பொழுது ஒரு மினிபஸ் மட்டுமே ஈடுபட்டு வருவதாகவும் இதற்கான அனுமதி மட்டுமே வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மைக்கால அசம்பாவிதங்கள் மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு, பயப் பிராந்தி காரணமாக கடந்த இரண்டு மாதங்களாக ஒழுங்காக சேவையில் ஈடுபடாத இரண்டு மினி தனியார் வாகனங்கள் சேவையில் ஈடுபடுவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பகுதிக்கான சேவையை இலங்கை போக்குவரத்துச் சபை இரண்டு வருடங்களுக்கு முன்னதாகவே நிறுத்தி இருந்தது.

இதனால் இந்தப் பகுதியில் தொடர்ந்து தங்கி இருக்கும் மக்கள் போக்குவரத்து செய்வதில் பெரும் இடர்பாடுகளை எதிர்நோக்குவதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

(ப-88)

## மழை வேண்டி கொடும்பாவி எரிப்பு

வலி.தென்மேற்கு, ஒக்.7

காலபோக நெல் விதைப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் மழையின்மையால் மழை வேண்டி கொடும்பாவிகட்டி இழுத்து எரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த செய்வாய்க்கிழமை மாலை மாதகல் பகுதியிலுள்ள விவசாயிகள் மழை வேண்டி கொடும்பாவி கட்டி எரித்தனர். மாதகல் சித்திவிநாயகர் ஆலயத்திற்கு சமீபத்தில் உள்ள இளைஞர் சங்க சனசமூக நிலையத்தைச் சேர்ந்த இளைஞர்களும் விவ சாயிகளுடன் இணைந்து கொடும்பாவி கட்டி இப்பகுதி ஒழுங்கைகள், வீதிகள் ஊடாக இழுத்துச் சென்று மாதகல் சந்தியில் வைத்து எரித்தனர்.

(ப-135)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
30 ❖ 04 ❖ 1928



மறைவு
09 ❖ 09 ❖ 2006

### சரவணப்பெருமாள் சத்தியமூர்த்தி

*(இளைப்பாறிய அதிபர், யா/சிதம்பரக்கல்லூரி,*
*யா/தொண்டைமானறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம்)*

**அன்பின் சிகரமாய்**
**அறிவூட்டிய ஆசானே!**
**கடமையில் கண்ணாகவும்**
**கண்ணியத்தில் நேர்மையாகவும்**
**அற்றவர் பசி தீர்த்த வள்ளலே!**
**செல்வச்சந்நிதியானுக்கு**
**தொண்டாற்றிய எம் தெய்வமே!**
**அவனது பாதங்களிடமே சேர்ந்து விட்டீரே ஐயா!**

*நாளை (08.10.2006) அதிகாலை அன்னாரின் அந்தியேட்டி கிரியைகள் அவரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்னாரது ஆத்மசாந்தி கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகிறோம்.*

*ஈமக்கிரியைகளில் கலந்துகொண்டு எமது துயரத்தில் பங்கு கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்திகளை அனுப்பியவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.*

"நித்தியானந்த வாசம்"
வேம்படி ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.
(54138)
தகவல்:
குடும்பத்தினர்.

## ஈரவிழிகளுடன் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
09 - 01 - 1952



இறைவன் திருவடியில்
19 - 09 - 2005

அமரர்
### பொன்னுத்துரை வரதராஜா

திதி: பிரதமை 07.10.2006

*அப்பா அப்பா என்று பாசமாய் நாமழைக்க*
*எங்கு சென்றனை எமைவிட்டு*
*திங்களாய் உன்முகம் எங்கும் தெரியுதப்பா!*
*ஆண்டு ஒன்றாகியும் ஆறாது எம் துயர்*
*உங்கள் பிரிவை எண்ணித் தவிக்கின்றோம் அப்பா!*
இவரது ஆத்மா இறைவன் திருவடியில்
சாந்திபெறப்பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

64, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.
மனைவி, பிள்ளைகள்,
அன்புச் சகோதரி
இன்பராணி விஜயரூபன்(பிரான்ஸ்).
(54126)


### COMPUTER EXPRESS
Institute of Information Technology
இல. 15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
021-222 8250,0777- 222422

**மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2006**

பதிவுகளில் அதிரடிகள்

**80% OFF**

| பாட நெறிகள் | | | செலுத்தவேண்டிய கட்டணம்(20%) |
|---|---|---|---|
| Diploma in computer Science | - 4மாதம் | [illegible] | 1,650 |
| Honours Diploma in Computer Science | - 5மாதம் | [illegible] | 2,100 |
| Diploma in Web Page Designing | - 4 மாதம் | [illegible] | 1,650 |
| Diploma in Graphic Designing | - 4 மாதம் | [illegible] | 1,650 |
| Diploma in Desk top Publishing | - 4 மாதம் | [illegible] | 1,450 |
| Diploma in Hard Ware Engineering | - 3 மாதம் | [illegible] | 1,450 |
| Accounting Package | - 3 மாதம் | [illegible] | 1,650 |
| Diploma in AutoCAD | - 3 மாதம் | [illegible] | 1,450 |
| MS Office | - 3 மாதம் | [illegible] | 1,000 |

**50% Off Advances Courses**
Diploma in Video Editing ~~6500~~ 3250
Diploma in Multimedia ~~5500~~ 2750

வகுப்புக்கள் ஆரம்பம் :-
Batch I - 07/10/2006
Batch II - 08/10/2006
Batch III - 09/10/2006
Batch IV - 14/10/2006

கம்பியூட்ர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.
சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்,வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி.

3 மாதகால Diploma in Computerized Accounting & Tally புதிய பிரிவுகள் ஆரம்பம்.
ஆரம்பம். Batch I :- 07/10/2006, Batch II :- 08/10/2006



### COMPUTER EXPRESS
Institute of Information Technology
இல. 15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
021-222 8250,0777- 222422

**ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்**

**Diploma in Hardware Engineering**
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault Finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking Etc..
Course Fee :2000/=

**Diploma in Computerized Accounting**
ACCPAC + Quick Books Premier + MYOB ஆகிய முன்னணி Accounting Software களினூடாக-கற்பிக்கப்படும்.
Course Fee :3500/=

**Diploma in Video Mixing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter.
Course Fee :3000/=

**Diploma in Graphic Designing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Corel Draw ❖ Cool3D Studio ❖ Micro media Flash MX
Course Fee :2000/=

**ஒரே நாளில் ஆரம்பம்:- 09/10/2006 - 09.00**

3 மாதகால Diploma in Computerized Accounting & Tally புதிய பிரிவுகள் ஆரம்பம்.
ஆரம்பம். Batch I :- 07/10/2006, Batch II :- 08/10/2006


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு-தெற்கு தொடர்புகள் இன்மை குறித்து கத்தோலிக்க துறவறத் தலைவர்கள் கவலை

## யுத்தம் தீர்வல்ல; பேச்சை ஆரம்பியுங்கள் என வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஒக்.7

வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையில் தொடர்புகள் கொள்ளக்கூடிய நிலைமை அற்றுக் காணப்படுவது குறித்து இலங்கை தமிழ்-சிங்கள கத்தோலிக்க துறவற சபைகளின் தலைவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இன்றைய பிரச்சினைக்கு யுத்தம் தீர்வல்ல; இருதரப்பினரும் பேச்சுகளை உடன் ஆரம்பிக்க வேண்டும் என்றும் அவர்கள் மேலும் வலியுறுத்தியுள்ளனர்.

இலங்கைத் தமிழ்-சிங்கள கத்தோலிக்க துறவற சபைகளின் தலைவர்கள் தமது வருடாந்த ஒன்றுகூடலின்போது மேற்படி வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய பகுதிகளுக்கு அவர்கள் வந்து நிலைமைகளை நேரடியாகப் பார்வையிட்ட பின்னரே மேற்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

6பேர் கொண்ட குழு மன்னாருக்கும் 3 பேர் கொண்ட குழு யாழ்ப்பாணத்திற்கும் விஜயம் மேற்கொண்டிருந்தது.

இராணுவத்தினர், பொதுமக்கள், அரச உயரதிகாரிகள், விடுதலைப்புலிகள் ஆகியோரை அவர்கள் அண்மையில் சந்தித்தனர்.

தமிழ் மக்களுடன் தமது ஒன்றிப்பைத் தெரிவிக்கவும், மன்னாரிலும் யாழ்ப்பாணத்திலும் பல கஷ்டங்களுடன் வாழும் மக்களை நேரடியாகக் கண்டு உரையாடி அண்மைக் கால நிகழ்வுகள் பற்றி ஊடகங்கள் வழியாக தாம் கேட்டு கொண்டவற்றை உறுதி செய்யும் நோக்குடனேயே அவர்கள் இவ்விரு பகுதிகளுக்கும் விஜயம் செய்தனர்.

தமது மன்னார் விஜயத்தின்போது மன்னார் பிரஜைகள் குழு, அரச அதிகாரிகள், அரசசார்பற்ற நிறுவனங்கள், பாதுகாப்புப் படையினர் போன்றோரைச் சந்தித்துள்ளனர். யாழ்ப்பாணத்திலும் இதே போன்ற சந்திப்புகளோடு விடுதலைப்புலிகளின் சமாதான செயலகத்தின் பணிப்பாளர் புலித்தேவனையும் சந்தித்துள்ளனர்.

அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில்

வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையில் தொடர்பு கொள்ளக்கூடிய தன்மை அற்றுக் காணப்படுகின்றது. வடக்கில் நடைபெறும் சில சம்பவங்கள் தெற்குப் பத்திரிகைகளில் வெளிவருவதில்லை. வெளிவருகின்ற செய்திகளும் பக்கச்சார்பானவையாக அல்லது வதந்திகளாக உள்ளன. உண்மையை அறிய மனிதனுக்கு உரிமை உண்டு. அவ்வுரிமையினை வளப்படுத்துங்கள். மனித உயிர்களுக்கு மதிப்பளித்து செயற்பட வேண்டுகின்றோம். யுத்தம் பிரச்சினைகளுக்குத் தீர்வல்ல. உடன் பேச்சுகளை ஆரம்பியுங்கள் என சம்பந்தப்பட்டவர்களை வேண்டுகின்றோம். - என்றுள்ளது. (ப)

# கடலில் கைவிடப்பட்ட நிலையில் வள்ளங்கள்

மண்டைதீவு, ஒக்.7

மண்டைதீவு கடற்பகுதிகளில் கைவிடப்பட்ட வள்ளங்கள், வலைகள், புதைப்பு வலைகள் மற்றும் உபகரணங்கள் தொடர்ந்தும் கடலிலேயே இருப்பதாகக் கூறப்படுகிறது.

தொழிலாளர் இடம்பெயர்ந்துள்ளமை, மீளக்குடியமர இயலாமை, அவற்றை மீட்டு எடுக்க அனுமதிக்கப்பட்டாமை போன்ற பல்வேறு காரணங்களால் மண்டைதீவு கடல்தொழிலாளர்கள் பலலட்சம் பெறுமதியான தமது முதலீடுகளை இழந்துவரும் அவலத்திற்குள்ளாகியுள்ளதாக இடம்பெயர்ந்துள்ளவர்கள் தெரிவிக்கின்றனர். (ப-88)

# பொருள் பெறாதவர்களுக்கும் விநியோகம் நடைபெறுகின்றது

## நீர்வேலி ப.நோ.கூ.சங்கம் விளக்கம்

யாழ்ப்பாணம், ஒக் 7

நீர்வேலி பலநோக்குச் சங்கத்தில் இதுவரை உணவுப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு இப்போது அவை வழங்கப்படுகின்றன. நீர்வேலி பல.நோ.கூ. சங்கப் பொது முகாமையாளர் இதனை அறிவித்துள்ளார்.

கடந்த மூன்றாம் திகதி உதயன் பத்திரிகையில் இரண்டாம் பக்கத்தில் 'நீர்வேலியில் பாவனையாளர் சிலருக்கு இப்படி ஒரு கஷ்டம்' என வெளியாகியிருந்த செய்தி தொடர்பாக அவர்கள் உதயனுக்கு அனுப்பியிருந்த விளக்கக் கடித்தத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்தக் கடித்தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மூன்றாம் கட்ட விநியோகத்திற்கான உணவுப் பொருள்கள் எமக்கு முழுமையாகக் கிடைக்காமையால் விநியோகத்தில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

கடந்த இரண்டாம் திகதி மீதி உணவுப் பொருள்களை அரச அதிபர் தந்துள்ளமையால் இதுவரை அவற்றைப் பெற்றுக்கொள்ளாத பாவனையாளர்களுக்கான விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தனியாக கிளை முகாமையாளர்கள் கடமைபுரியும் கிளைகளில் விநியோகத்தைத் துரிதப்படுத்துவதற்காக விநியோகம் இடம்பெறும் நாள்களில் உதவியாளர்களை அமர்த்தும்படி கிளை முகாமையாளர்களுக்குப் பணிக்கப்பட்டிருந்தது.

அவ்வாறான கிளைகளில் உதவியாளர்கள் அமர்த்தப்பட்டுள்ளார்கள். இது தவிர வேறு எந்தக் காரணங்களின் அடிப்படையிலும் வெளியாள்கள் எவரும் கிளைகளில் இல்லை என்றும் மோசடிகள் எதுவும் இடம் பெறவில்லையெனவும் தெரிவித்துக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (ப-203)

# மீன் விலை இன்னமும் இறங்கவில்லை

மண்டைதீவு, ஒக் 7

பண்ணைவீதியில் உள்ள கொட்டடி மீன் சந்தையில் தீவுப்பகுதி மற்றும் குருநகர் பகுதிகளில் இருந்து வரும் மீன் வகைகள் விற்பனை செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மீன்வரவு கணிசமானதாக இருந்தபொழுதும் விலைகள் உச்ச நிலையில் காணப்பட்டதாக வாடிக்கையாளர்கள் தெரிவித்தனர்.ஒருகிலோ சூடை மீன் 160 ரூபா விற்கும் மூன்று நீலக்கால் நண்டு 600 ரூபா விற்கும் அரைக் கிலோவிற்கும் குறைவான ஒருசாண் வரை நீளமான விளைமீன் 650 ரூபாவிற்கும் விற்கப்படுகின்றது.

மேலும் இந்தச் சந்தையில் கால் கிலோ கணவாய் 150 ரூபாவிற்கு விற்கப்படுவதுடன், 'பாக்காய் நண்டு' 'பெரு நண்டு' என்பனவும் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன. (ப-88)

# பட்டமளிப்பு விழாவுக்குப் போகமுடியாதுள்ள யாழ்.தேசிய கல்வியற்கல்லூரி மாணவர்கள்

## பயண ஒழுங்குக்கு உதவுமாறு கோரிக்கை

மண்டைதீவு, ஒக்.7

இலங்கையில் உள்ள சகல தேசியக் கல்லூரி மாணவர்களுக்குமான பட்டமளிப்பு விழா எதிர்வரும் திங்கள் மற்றும் செவ்வாய்க்கிழமைகளில் கொழும்பு பண்டார நாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தல் தாமதமாகக் கிடைத்துள்ளதாலும் மாணவர்களுக்கான தனிப்பட்ட அழைப்புக்கள் சரியான நேரத்தில் கிடையாமையாலும் யாழ்ப்பாண தேசியக் கல்வியியற் கல்லூரி மாணவர்கள் இந்தப் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்ள இயலாத நிலையில் இருப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் இதற்கான பயண ஒழுங்குகளை ஏற்பாடு செய்து உதவுமாறு யாழ்.அரச அதிபருடன் தொடர்பு கொண்டபொழுது குறித்தகாலப் பகுதிக்கான பயணப்பதிவுகள் முடிவடைந்து இருந்ததென்பதை அறியமுடிந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.மாணவர்களின் நன்மை கருதி யாழ். தேசிய கல்விப்புலத்தைச் சேர்ந்தவர்களும், உயர்கல்வி நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும், பல்கலைக்கழக உயர்நிலையதிகாரிகளும் மாற்று நடவடிக்கை எடுத்து தமது பயண ஒழுங்கை செய்துதருமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளர்.

அரச உயர்நிலைஅதிகாரிகள் மற்றும் யாழ்.படைத்தளபதி சந்திரசிறி அகியோருக்கும் உதயன் பத்திரிகை மூலம் இந்த விண்ணப்பத்தை தெரிவிப்பதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளர். (ப-88)

# விதைப்பு செய்த விவசாயிகள் மழையின்மையால் விசனம்

வலிதென்மேற்கு, ஒக்.7

மானிப்பாய், கட்டுடை,சண்டிலிப்பாய் பகுதிகளில் அண்மையில் பெய்த சிறுமழையை அடுத்து நெல்விதைப்பு செய்த விவசாயிகள் தொடர்ந்து மழைபெய்யாததாலும்கடும் வரட்சி நிலவி வருவதாலும் தாம் விதைத்த நெல் முளைக்காது போய் விடுமோ என்று அச்சமும் கவலையுமடைந்துள்ளனர். இவ்வாறு விதைத்த நெல் சரிவர முளைத்து பயிராகாது விடும்பட்சத்தில் புதிதாக மீண்டும் விதைப்பதற்கு தம்வசம் விதைநெல் எதுவும் இல்லாமல் உள்ளது என்றும் இவர்கள் தெரிவிக்கின்றனர். இப் பகுதிகளில் விதைநெல்லுக்கு பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. 70கிலோ நிறையுள்ள ஒரு புசல் விதை நெல் 3ஆயிரத்து 500ரூபா முதல் 4ஆயிரம் ரூபாவாக விற்கப்பட்டு வருகின்றது. (ப-135)

# குழந்தைகள் பால்மா தட்டுப்பாடு குறித்து வ.இ.பத்திரிகையாளர் சங்கம் கவலை

## உதவக்கோரி செஞ்சிலுவை சர்வதேசக் குழுவுக்கு மகஜர்

யாழ்ப்பாணம், ஒக்.7

யாழ்.குடாநாட்டின் அசாதாரண சூழ்நிலையால் குழந்தைகளுக்கான பால்மா தட்டுப்பாடாக உள்ளது. இதனால் பாரிய பின்விளைவுகள் ஏற்படக்கூடும். எனவே இவ்விடயம் தொடர்பில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை எடுத்து உதவ வேண்டும்.

இவ்வாறு வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது குறித்து வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம் செஞ்சிலுவைச் சர்வதேச குழுவிற்கு அனுப்பியுள்ள மகஜரில்-

குடாநாட்டில் குழந்தைகளுக்கான பாலுணவிற்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியினால் பாரிய பின்விளைவுகள் ஏற்படலாமென அச்சம் கொண்டுள்ளளோம். இவ்விடயம் தொடர்பில் எமது பிரதிநிதிகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ்.வதிவிடப் பிரதிநிதிகளுடன் நேரில் பேச்சு நடத்தியுள்ளனர்.

[illegible]டன் இவ்விடயம் செஞ்சிலுவைச் ச[illegible] குழுவின் கொழும்பு தலைமையக [illegible]ப் பிரதிநிதியின் கவனத்திற்கும் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

கடந்த ஒகஸ்ட் 11ஆம் திகதி மூண்ட மோதல்களை அடுத்து ஏ-9 வீதி துண்டிக்கப்பட்டுள்ள நிலையில், குழந்தைகளுக்கான பால்மாவிற்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. வெளிச்சந்தையில் ஐந்து வயதிற்குட்பட்ட சிறு குழந்தைகளுக்கான பால்மா எதுவுமே இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், குழந்தைகளுக்கான பாலுணவினைக் கப்பல் மூலமாகவேனும் எடுத்து வந்து விநியோகித்து உதவுமாறு செஞ்சிலுவை சர்வதேச குழுவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (202)

# மூலப்பொருள் தட்டுப்பாட்டால் வேலைத்திட்டங்கள் முடங்கல்

## மாநகரஆணையாளர் கவலை தெரிவிக்கிறார்

கல்வியங்காடு, ஒக்.7

குடாநாட்டில் சிமெந்து உட்பட பல மூலப்பொருள்களிகுத் தட்டுப்பாடு நிலவுகின்றது. இதனால் யாழ். மாநகர சபைக்குட்பட்ட பல வேலைத்திட்டங்கள்களை முன்னெடுக்கமுடியாதுள்ளது. என யாழ்.மாநகர சபை ஆணையாளர் எம்.எஸ்.சரவணபவ தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:

குடாநாட்டில் தற்போது நிலவிவரும் சீமெந்து உட்பட்ட பல மூலப்பொருள்களுக்கான தட்டுப்பாட்டால் மாநகரசபையின் பல வேலைத்திட்டங்கள் முடக்கப்பட்டுள்ளன. குறிப்பாக வீதி புனரமைப்பு வேலைகள் மற்றும் சந்தைக் கட்டடத் தொகுதி புனரமைப்பு போன்ற வேலைத்திட்டங்களே பாதிக்கப்பட்டுள்ளன - என்றார். (ப-202-79)

# இவர்கள் இன்று பெற்றோல் பெறலாம்

யாழ்ப்பாணம், ஒக்.7

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிலையத்தில் எரிபொருள் பெறுவதற்கான பங்கீட்டு அட்டையைப் பெற்று இதுவரை பெற்றோல் பெறாதவர்கள் இன்று சனிக்கிழமை சங்கத்தின் முற்றவெளி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோல் பெறலாம் என சங்கத்தலைவர் தெரிவித்துள்ளார். (ப-202)

# வழக்கம்பரையில் முதியோர் இல்லம்

சுழிபுரம், ஒக்.7

சிவபூமி அறக்கட்டளை, முதியோர் பராமரிப்பு இல்லம் ஒன்றை ஆரம்பித்து நடத்தவுள்ளது. இதற்கென வழக்கம்பரை தொல்புரம் வீதியில் கட்டடம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.இவ்வாண்டு இறுதிக்குள் முதியோர் இல்லம் திறக்கப்பட்டு செயற்படத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ப-202-28)

# பாகற்காயில் ஊறுகாய் செய்து பயன் அடைவோம்

யாழ்.மாவட்டத்தில் தற்போது காணப்படுகின்ற உணவுத்தட்டுப்பாட்டை பூர்த்தி செய்வதற்கு உரிய நடவடிக்கைகளை நாமே முன்னெடுத்துச் செல்ல வேண்டியுள்ளது. அந்த வகையில் சந்தையில் மலிவான விலைகளில் பெற்றுக் கொள்ளக்கூடிய மரக்கறி வகைகளைப் பதப்படுத்தி பாதுகாத்து வைத்தல் அவசியம் ஆகின்றது. சத்துள்ள மரக்கறியும் மருத்துவ குணமுள்ளதுமான பாகற்காயில் ஊறுகாய் செய்து சேமித்து வைத்துப் பயன் பெறுவோம்.

### பாகற்காய் ஊறுகாய்

*தேவையான பொருள்கள்:*

| | |
|---|---|
| பாகற்காய் | - 250 கிராம் |
| எலுமிச்சை | - 8 கிராம் |
| வெந்தயம் | - 50 கிராம் |
| பச்சை மிளகாய் | - 100 கிராம் |
| உப்பு | தேவையான அளவு |
| செத்தல் மிளகாய் | - 20 |

*செய்முறை:*

மெல்லிய தடிப்புடைய 2 அங்குல அளவு நீளமான பாகற்காயை நீளமாக வெட்டி பின்பு அதன் ஈரப்பற்றை அகற்றி சிறிது நேரம் உலர விடவும். எலுமிச்சையில் இருந்து பெறப்பட்ட சாற்றில் பாகற்காய் துண்டுகளையும், சிறிது சிறிதாக வெட்டிய பச்சை மிளகாய் துண்டுகளையும் இட்டு மூன்று நாள்கள் ஊறவிடவும்.

செத்தல் மிளகாய், வெந்தயம் என்பவற்றை வறுத்து தூளாக்கி இதனுடன் உப்பையும் சேர்த்து தூளாக வைத்திருத்தல் வேண்டும். இத்தூளையும் 3 நாள்கள் ஊறவிட்ட பாகற்காயையும் சேர்த்து கரண்டியால் பிரட்டவும். கையால் பிரட்ட வேண்டாம். இதனை ஒரு கிழமையின் பின் ஊறுகாயாகப் பயன்படுத்தலாம்.

**திருமதி.கி.சிவதீபன்**
*விவசாய கண்காணிப்பு உத்தியோகத்தர்,*
*பிரதி விவசாயபணிப்பாளர் (விரி) அலுவலகம்.*
*யாழ்ப்பாணம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரிகள் கவனம் எடுத்து உதவக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.7

கைதடி, நாவற்குழி தெற்கு, கோயிலாக்கண்டித் துறையைச்சேர்ந்த கடற்றொழில் செய்யும் குடும்பங்கள் தொழில் இன்மையாலும் வருமானம் இன்மையாலும் பட்டினிச்சாவை எதிர்நோக்கியுள்ளதாக கைதடி நாவற்குழி தெற்கு ஸ்ரீமகாவிஷ்ணு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

இம்மக்கள் தொழிலுக்கும் செல்ல முடியாமலும் இடம்பெயரவும் முடியாமல் தவிப்பதாகத் தெரிவித்துள்ள அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுத்து இம்மக்களின் பிரச்சினைகளை அறிந்து தீர்த்துவைக்க முன்வரவேண்டும் என்றும் கோரியுள்ளனர். (ப)

# விவசாயிகளுக்கான எரிபொருள் அட்டை கமநல நிலையம் மூலம் விநியோகம்

வலி.தென்மேற்கு, ஒக்.7

யாழ். கலநல அபிவிருத்தி திணைக்களம் விவசாயிகளுக்கான எரிபொருள் விநியோக அட்டைகளை யாழ். மாவட்டத்திலுள்ள கமநல சேவை நிலையங்கள் மூலம் வழங்கி வருகின்றது.

விவசாயிகள் சம்மேளனங்களின் சிபாரிசின் படி மேட்டுப் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் தமக்குத் தேவைப்படும் மண் எண்ணெயை பெறுவதற்கான இந்த எரிபொருள் விநியோக அட்டை வழங்கப்படுவதாக யாழ்.கமநலஅபிவிருத்தித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இதே சமயம் உடுவில் கமநலச் சேவை நிலைய பிரதேசத்திலுள்ள மேட்டுப் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு தற்போது அவ்வப்பகுதி விவசாயிகள் சம்மேளனங்கள் மூலம் இந்த எரிபொருள் விநியோக அட்டை வழங்கப்பட்டு வருகின்றது. இதேவேளை, புதிய உரமானியத் திட்டத்தின் கீழ் நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு உரம் வழங்கப் படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதற்கான விண்ணப்பங்கள் விவசாயிகள் சம்மேளனங்கள் ஊடாக உடுவில் கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தரினால் திரட்டப்பட்டு வருகிறது.

(ப-135)

# வயோதிபர்களுக்கு நுளம்பு வலைகள்

தென்மராட்சி,ஒக்.7

சர்வதேச முதியோர் தினத்தையொட்டி சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் படுக்கையில் உள்ள வயோதிபர்களுக்கு நுளம்பு வலைகள் வழங்கவுள்ளனர்.

படுக்கையில் உள்ள முதியோர்களின் விவரங்கள் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக திரட்டப்பட்டு வருவதாகவும் எதிர்வரும் எட்டாம் திகதி கழகத்தினர் நேரடியாகச் சென்று நுளம்பு வலைகள் வழங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ப)

## பாராட்டுகள்

*கடந்த 11.08.2006 அன்று நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைமையின் பின் மக்களுக்கு ஏற்பட்ட உணவுத் தட்டுப்பாட்டு வேளையில் அதனை நிவர்த்தி செய்யும் வகையில் அர்ப்பணிப் புடன் செயற்பட்ட கூட்டுறவாளர்களுக்கும் அரச ஊழியர்களுக்கும் குறிப்பாக கால நேரம் பாராது உழைத்த கூட்டுறவு ஊழியர்களுக்கும் எமது பாராட்டுகளும் நன்றிகளும். அவர்கள் பணி மேலும் சிறப்புடன் தொடர வாழ்த்துகள்.*

வளர்மதி நிறைவாழ்வகம்,
கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழகம்.

சம்பியன் லேன்,
கொக்குவில்.

## மணமகள் தேவை

*யாழ்.உயர் கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 29 வயது லக்கினத்திற் செவ்வாய், 5'4'' பாவம் 65 உள்ள* **B.Sc** *பட்டதாரிக்கு அழகிய படித்த (25வயதுக்கு மேற்படாத) மணமகள் தேவை. கடிதமூலம் குறிப்புடன்*

சிவசுதன்,
Urban Council,
சாவகச்சேரி.

என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
T.P: 0602213199 (54202)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 07 - 12 - 1927



விண்ணில் 18 - 09 - 2005

**திருமதி கனகரத்தினம் சரஸ்வதி**

திதி: 07.10.2006

*புன்னகை தவழும் புனித தாயே...*
*புகழ்பூத்த பெண்ணின் பெருந்தகையே...*
*கூடிவரும் உற்றாரை குமின் சிரிப்பால்*
*கூடியே அரவணைத்த பெருநிதியே*
*வாடியவர்க்கு வாழ்வளித்த வாருதியே...*
*வாடவிட்டுசென்றீரே அம்மா...*

சின்னத்துரை கனகரத்தினம்
*(கணவர் -ஜே.பி.யூ.எம்)*
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*'சிவஸ்தான்'*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*

## ஈரவிழிகளுடன் எட்டாண்டுகள்

வையகப் பூவாக 08 - 01 - 1935



வானகச் சுடராக 07 - 10 - 1998

அமரர்

**சின்னத்தம்பி செல்லத்துரை**

(Retired Police Inspector)

அன்பு காட்டிய அப்பாவே!
குடும்பத்தை வழிநடத்திய தலைவனே!
எம்மை வாழ வைத்த தெய்வமே!
எம்மை விட்டுப் பிரிந்து
எட்டு ஆண்டுகள் சென்றதே
உங்கள்ஆத்மசாந்திக்காக
நித்தம் நாம் விழுகின்றோம்
இறைவன் திருவடியில்......

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
அன்பு மனைவி (ராஜேஸ்வரி),U.K
அன்புப் பிள்ளைகள்
(செல்வமேனன், செல்வரமேஸ்),U.K
மருமகள்மார் (சுஜீர்தா, தனிஜா),U.K
பேர்த்திமார் (திசானா, அபினா) U.K

*நிரந்தர முகவரி,*
*துணாவில்,*
*சாவகச்சேரி.*

(54138)

# பதவி உயர்வு

சாவகச்சேரி [illegible]வான் நீதிமன்றப் பதிவாளராக கட[illegible]ய செ.விக்கினேஸ்வர மூர்த்தி, பதிவா[illegible] II இற்கு பதவியுயர்வு வழங்கப்பட்டு பருத்தி[illegible]துறை மாவட்ட நீதி மன்றுக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

ஒக்ரோபர் முதலாம் திகதி தொடக்கம் செயற்படும் வண்ணம் நீதிச்சேவைகள் ஆணைக்குழு செயலாளரினால் இந்தப் பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளது. (ப)

# மானிப்பாயில் பெற்றோல் விநியோகம்

வலி.தென்மேற்கு, ஒக்.7

மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கான பெற்றோல் விநியோகம் வியாழக்கிழமையும் வெள்ளிக்கிழமையும் நடைபெற்றபோது 2ஆயிரத்து 623 பேருக்கு 2லீற்றர் பெற்றோல் வீதம் வழங்கப்பட்டது. ஒருவருக்கு 200 ரூபா என்ற அடிப்படையில் காசுக்கு வழங்கப்பட்ட இப்பெற்றோலைப் பெறுவதற்கு நீண்டநேரமாக மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வாகன உரிமையாளர்கள் வரிசையில் காத்து நின்று பெற்றுக்கொண்டனர். (ப)

## போட்டிப்பரீட்சைக்கான வகுப்புகள்

1) பொது உளச்சார்பு
2) பொது அறிவு

ஆசிரியர் : த.தவசேகர்

சனி, ஞாயிறு - 11.30 / 1.30
ஆரம்பம் ஞாயிறு 11.30

DMI
வெலிங்டன் சந்தி

(54287)

## வீடு வாடகைக்கு

*நல்லூர், அரசடி சிவன் புதுவீதியில் 4அறை கொண்ட மேல்மாடி வீடு வாடகைக்கு உண்டு.*

**தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி**

K.முத்துக்குமாரன்.
தொ.பே:0212226726

(54203)

## இன்று ஆரம்பம்

**NEW SCIENCE HALL**
யாழ்ப்பாணம்

2008, 2007 **A/L Day Class** அனைத்து வகுப்புக்களும் வழமையான நேர அட்டவணைப்படி சனி 07.10.2006 முதல் நடைபெறும்.

## மணமகள் தேவை

மனைவியை இழந்து சொந்தவீட்டில் தனிமையில் இருப்பவரும், அரசசேவையில் இருந்து விலகி வேளாண்மையைக் குலத்தொழிலாக செய்துவரும் நல்லொழுக்கமுடைய ஒருவருக்கு நடுத்தர அல்லது சற்று அதிகமான வயதைக்கொண்ட திடகாத்திரமான விதவை அல்லது விவாகரத்துப் பெற்ற கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணப்பெண் தேவை.

தொடர்பு : விளம்பர இல. 2928
மே/பா உதயன், யாழ்ப்பாணம்.

## பாலன் மில்ஸ்

தேங்காய்எண்ணெய், இலுப்பெண்ணெய், நல்லெண்ணெய்(எள்) போன்ற (3கிலோவிலிருந்து ஆயிரம் கிலோ வரை) எண்ணெய் வகைகளை நவீன இயந்திரத்தில் வடித்துக்கொள்ள உடன் நாடவேண்டிய இடம்.

"பாலன் மில்ஸ்"
மாவடிச்சந்தி - வட்டுக்கோட்டை.
கஜலக்சுமி அரிசி ஆலை,
வட்டுக்கோட்டை.
[illegible]

## மரண அறிவித்தல்கள்

### இராமலிங்கம் சிவானந்தன்

*(மாமா -அங்கிள்)*

சாவகச்சேரி, ஆஸ்பத்திரியடியைப் பிறப்பிடமாகவும்,தெகிவளையை வசிப்பிடமாவும் கொண்ட சிவானந்தன் (அங்கிள்) 06.10.2006 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் - அன்னம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கமலாசனியின் அன்புக் கணவரும் வற்சலா(தெகிவளை), மஞ்சுளா(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஞானகுணாளன், வினோதன் ஆகியோரின் மாமனும் கனகாம்பிகை (கிளிநொச்சி), பரமேஸ்வரன் (கொழும்பு) காலஞ்சென்ற அகிலாண்டேஸ்வரி மற்றும் மங்கயர்க்கரசி (உருத்திரபுரம்), தவமணி(ரங்கா- முகமாலை) ஆகியோரின் பாசமிகு சகோதரனுமாவார். நிரூஜன், ஹரிதாஸ், சங்கரி, நிரோஜினி, சங்கீத், ஐஸ்வினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08.10.2006 ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியை கல்கிசை இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
**மகாலிங்கம் (மைத்துனர்).**

*(54188)*

### சாமிநாதன் மாசிலாமணி



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சாமிநாதன் - மாசிலாமணி 06.10.2006 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் மேரியம்மாவின் அன்புக் கணவரும் புவனேஸ்வரன், சந்திரலீலா, டேவிட்ராஜா, (இ.மி.ச - சுன்னாகம்), மெற்றில்டா, மரியகார்மேல், அன்ரன் ஜெலான் (இ.மி.ச - மன்னார்) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக 07.10.2006 சனிக்கிழமை பி.ப 2 மணியளவில் உரும்பிராய் புனித மிக்கேல் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
**மா.டேவிட்ராஜா (மகன்)**
*(இ.மி.ச.).*

*உரும்பிராய் கிழக்கு,*
*உரும்பிராய்.*
*(54206)*

### தம்பையா பரந்தாமன்

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட தம்பையா பரந்தாமன் அவர்கள் 05.10.2006 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் தவமணியின் (இராசாத்தி) அன்புக் கணவரும் கவிதா (கொழும்பு), சண்முகப்பிரியா(அமெரிக்கா), உஷா (கொழும்பு), சதீஸ்(வவுனியா), பாமினி(சுவிஸ்), தர்சிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிரசன்னா (ஐயப்பன் பந்தல் சேவை), ஜெயபாலன் (அமெரிக்கா),அன்பன் (கொழும்பு), சிவநாசன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனும் விந்துஷன், நிவேதினா, கதிர்ச்செல்வன், ஹரிணி(சுவிஸ்) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (06.10.2006) வெள்ளிக்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மஞ்சவனப்பதி வீதி,*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.*
*(54188)*

தகவல்:
*பரந்தாமன் தவமணி*
*(மனைவி).*

### துரைசிங்கம் குகபாலன் (கோபால்)

நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசாவிளானை வசிப்பிடமாகவும் தற்போது கொழும்பில் வசித்தவருமாகிய துரைசிங்கம் குகபாலன் அவர்கள் 04.10.2006 புதன்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரைசிங்கம் (புலோலி)- குணேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியர்) தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் தர்மராசா நீலாம்பிகை தம்பதியரின் மருமகனும் திருமதி வரலஷ்மி (கொ/புனித அந்தோனியார் மகளிர் கல்லூரி, கொழும்பு-3) பாசமிகு கணவரும் குகப்பிரியா (பிரான்ஸ்), ரதி (பிரான்ஸ்), ரமணி (கொ/இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி), ரமணன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் சிவகுமாரன் (பிரான்ஸ), ஜெயாளன் (பிரான்ஸ்), சி.தனலஷ்மி (ஆசிரியை, யாழ். நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை), செல்வி ஜெயலஷ்சுமி (தையல் போதனாசிரியர், பிரதேச செயலகம், உடுவில்), செல்வி கருணாலஷ்சுமி (பிரதேச செயலகம், தெல்லிப்பழை) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் பிரியானந் (பிரான்ஸ்), ஜெனோர்த்தனன் (பிரான்ஸ்), கீர்த்தனா (மாணவி, கொ/இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.10.2006) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு பொரளை ஜெயரட்ண புளோறிஸ் (**Jeyaratna Florists**) இல் நடைபெற்று பி.ப. 2 மணிக்கு பொரளை கனத்தை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சத்திவாசா,*
*லவ் லேன், உடுவில்.*
*தொ.பே.: 5523926*
*0776915337*

தகவல்:
*குடும்பத்தினர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏ-9 பாதையைத் திறக்க உதவுங்கள்

# ஒரு லட்சத்து பத்தாயிரம் மக்கள் மிகுந்த அவல நிலையில் வாழ்கின்றனர்

## இதனை நீக்க சர்வதேச சமூகம் உதவ வேண்டும்

யாழ்ப்பாணம்,ஒக்.7

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள ஒரு லட்சத்து 74 ஆயிரம் குடும்பங்களில், நில வளத்தையும், கடல் வளத்தையும் பனை, தென்னை வளங்களையும் நாளாந்த உழைப்பையும் நம்பி வாழ்பவர்களுமாக மொத்தம் 1 லட்சத்து 10 ஆயிரம் குடும்பங்கள் இப்போதைய விலைகளுக்கு அத்தியாவசிய உணவு மற்றும் பொருள்களை வாங்க முடியாத நிலையில் உள்ளனர்.

ஏ-9 பாதை மூடப்பட்டுள்ளதால் அவர்கள் மிகுந்த அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

மொத்தத்தில் குடாநாட்டு மக்களின் அவலங்கள் நீக்கப்பட்டு இயல்பு நிலை தோற்றுவிக்கப்படுவதற்கு ஏ-9 பாதை திறக்கப்பட வேண்டும்.

இதற்கு சர்வதேசமும் மனித உரிமை அமைப்புக்களும் தொண்டு நிறுவனங்களும் விரைந்து செயற்படுவது அவசியம்.

அவ்வாறு செயற்படுவதன் மூலமே இலங்கை அரசாங்கத்தின் திட்டமிட்ட தமிழின அழிப்பினை நிறுத்த உதவ முடியும்.

இவ்வாறு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவனேசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கோரிக்கை விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையின் முக்கிய பகுதிகள் வருமாறு:-

கடந்த 11.08.2006 இல் இலங்கை அரசின் ஆலோசனையுடன் அரச படைகள் ஏ-9 பாதையை தடைசெய்துள்ளன. இதன் காரணமாக குடாநாடு ஏனைய மாவட்டங்களுடனான பாதைகள் துண்டிக்கப்பட்டுள்ளமையானது யாழ்ப்பாணத்தில் ஓர் மனித அவலத்தை ஏற்படுத்தியுள்ளது. இலங்கை அரசு திட்டமிட்டு கட்டவிழ்த்துவிட்டுள்ள அரச பயங்கரவாதத்தினதும் உயர் பொருளாதார தடையினதும் வெளிப்பாடாக இந்த நடவடிக்கையினைப் பார்க்கலாம்.

**கடற்றொழில்**

கடற்றொழிலாளர்கள் யாழ்.குடாநாட்டில் 117 கடற் றொழிலாளர் சங்கத்தில் 19, 702 அங்கத்தவர்களை கொண்டு இயங்குவதுடன் 10 சமாசங்களையும் ஒரு சம்மேளனத்தையும் இயக்கி வந்துள்ள போதிலும் இத் தொழிற்பாட்டில் மறைமுகமாக கடல் உணவை விற்றும் இத் தொழிலுக்கு உதவுபவர்களாகவும் 20 ஆயிரம் பேர் செயற்பட்டுள்ளனர். இவற்றை அவதானிக்கும் போது கடற் றொழிலில் 40 ஆயிரம் குடும்பத்தைச் சேர்ந்த ஒன்றரை லட்சம் மக்கள் இத் தொழில் இல்லாமையால் வருமானம் இன்றி வாடும் அவலத்தை குடாநாட்டில் காணமுடிகிறது.

**விவசாயம்**

யாழ்.குடாநாட்டில் 247 விவசாய சங்கங்களில் அங்கத்துவம் பெற்றுள்ள 27 ஆயிரத்து 929 அங்கத்தவர்கள் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன் இவ்விவசாய உற்பத்திக்கு உதவும் 10 ஆயிரம் கூலித் தொழிலாளர்களும் தொழில் இன்றி பாதிக்கப்பட்டுள்ளனர். மொத்தமாக இத் துறையின் பாதிப்பால் 40 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த ஒன்றரை லட்சம் மக்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிப்படைந்துள்ளனர்.

**கால் நடை வளர்ப்பு**

இத்துறையைச் சேர்ந்த கால் நடை வளர்ப்பும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. கால் நடைத் தீனி, மருந்துப் பொருள்கள் ஒன்றரை மாதமாக யாழ்.குடாநாட்டிற்கு போதிய அளவு எடுத்துச் செல்லப்படாமை உணவின்றியும், மருந்துப் பொருள் இன்றியும் கால்நடைகள் நோய்க்குள்ளாகி இறந்துள்ளன. இந்நிலையில் இத் தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளும் பாதிப்படைந்துள்ளனர்.

**பனை, தென்னை வளம்**

பனை, தென்னை வளங்களை தமது ஜீவனோபாயமாக பயன்படுத்தும் பனம் தொழில் வல்லுநர்கள் யாழ்.குடாநாட்டில் 6 ஆயிரத்து 539 அங்கத்தவர்களைக் கொண்ட 17 பனை தென்னைவள கூட்டுறவுச் சங்கங்களையும் நான்கு கொத்தனிகளையும் ஓர் சமாசத்தையும் அமைத்து செயற்பட்டுவந்துள்ளன. ஆயினும் 11.08.2006 இல் இலங்கை இராணுவம் மிக மோசமான தாக்குதல்களை நடத்தியமையாலும் ஊரடங்குச் சட்டங்களைப் பிறப்பித்தமையாலும் இவர்கள் தமது உற்பத்திகளை மேற்கொள்ள முடியாமல் பாதிப்படைந்துள்ளனர். 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர் தமது தொழிலை விட்டுள்ளனர். விற்பனை இல்லாத சூழலும் ஒரு மாதத்திற்கு மேல் விற்பனை இல்லாமையால் வருமானம் இன்றி மிகுந்த கஷ்ர நிலைக்கு அங்கத்தவர்கள் தள்ளப்பட்டுள்ளமையாலும் வேறு தொழில்களை செய்யமுடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. மறைமுகமாக வீட்டில் இருந்து உற்பத்திகளை மேற்கொள்ளும் 4 ஆயிரம் குடும்பங்கள் உள்ளிட்ட 10 ஆயிரம் ஏழைத் தொழிலாளர் குடும்பங்கள் பட்டினிச் சாவை எதிர்கொண்டுள்ளன. இவர்களை நம்பியுள்ள 500 பணியாளர்களும் வேதனமின்றி பாதிக்கப்பட்டுள்ளனர்.



ஏனைய தரப்பினர் ஏ-9 பாதை தடையால் கட்டட நிர்மாணப் பொருள்கள் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளமையும் எரிபொருள் தடையும் சாதாரண நாளாந்த உழைப்பாளர்களான மேசன், தச்சுத் தொழில், கூலித் தொழில் செய்பவர்கள் கடுமையான பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளனர். இதனால் எவ்வித வருமானமுமின்றி 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பட்டினி வாழ்வை வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் தங்கியுள்ள 60 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் வறுமைக்குள் வாழ்வை நடத்துகின்றனர்.

ஊரடங்கினால் சிறிய வாகனங்களான சிற்றூர்திகள் முச்சக்கர வண்டிகளைப் பயன்படுத்தி நாளாந்த வருமானத்துடன் ஜீவனம் நடத்தியவர்களும் சிகை அலங்கரிப்பாளர்கள் வெண்மை வாணிபத்தினரும் தமது தொழிலைச் செய்யமுடியாது வருமானம் குன்றிப் போயுள்ளனர். நாளாந்த உழைப்பாளர்கள் குடாநாட்டில் 10 ஆயிரத்துக்கும் அதிகமாக உள்ளனர். இவர்களின் வருமானம் பாதிக்கப்பட்டுள்ளது.

உரிமைப் போரால் பல்லாயிரம் உறவுகளை இழந்து பல கோடி சொத்துக்களை இழந்து இழப்பதற்கு எதுவும் அற்ற நிலையில் வாழும் தமிழ் பேசும் மக்கள் தனியே வாழும் குடாநாட்டின் மீதான இத் தடை இன அழிப்பின் ஓர் வடிவமாகவே இலங்கைப் பேரினவாத அரசு மேற்கொண்டுவருகிறது. எனவே, இத்தகைய தொழில் சார் மக்களின் அவல நிலையைப் போக்க ஏ-9 பாதை திறக்கப்பட்டு இயல்புநிலை தோன்றி இராணுவ அழுத்தம் அற்ற சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும்.

யாழ்.குடாநாட்டு மக்களை திறந்த வெளிச் சிறைச் சாலையில் அடைக்காது அவர்களின் அவல வாழ்வை போக்க சர்வதேசமும் மனித உரிமைகள் அமைப்புக்களும் மனித நேய தொண்டு நிறுவனங்களும் விரைந்து செயற்பட வேண்டும் - என்று உள்ளது.

# புலிகள் என்ற பெயரில் தமிழர்களை கொல்வதை அரசு நிறுத்தவேண்டும்!

## சபையில் மகேஸ்வரன் எம்.பி. கோரிக்கை

கொழும்பு, ஒக். 07

''புலிகள் என்ற பெயரில் தமிழர்களைக்கொன்று குவிப்பதையும், கொழும்பில் தமிழர்களைக் கடத்திச் சென்று கப்பம் பெறுவதையும் அரசு உடனடியாக நிறுத்தவேண்டும். மூடப்பட்டிருக்கும் ஏ-9 பாதையைத் திறந்து வடக்கில் பட்டினியால் வாடுகின்ற மக்களைக் காப்பாற்ற உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும்.

- இவ்வாறு ஐ.தே.கவின் கொழும்பு மாவட்ட எம்.பி. மகேஸ்வரன் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் இடம்பெற்ற அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிக்கும் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

தொடர்ந்து உரையாற்றுகையில்,

புலிகளைத் தாக்குகிறோம் என்றுகூறிக்கொண்டு அப்பாவித் தமிழர்களைக் கொன்றுகுவிக்கும் நடவடிக்கையில் அரசு ஈடுபட்டுள்ளது. ஏ-9 பாதையை மூடி யாழில் பொருளாதாரத் தடையை ஏற்படுத்தி அரசு இந்த இராணுவ நடவடிக்கையை முன்னெடுத்துச் செல்கிறது.

கடந்த 50 நாட்களாகப் படையினர் மேற்கொள்ளும் இராணுவ நடவடிக்கை காரணமாக ஐந்தரை லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் யாழில் பேரவலத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

அரசு ஒரு திட்டமிட்ட நிகழ்ச்சி அட்டவணையின் கீழ் இந்த நடவடிக்கையை முன்னெடுத்துச் செல்கிறது. இதன்மூலம் தமிழர்களை அழித்தொழிப்பதே அரசின் திட்டம்.

யாழில் சிவில் நிர்வாகம் முற்றாக முடக்கப்பட்டு இராணுவ நிர்வாகம் நடைபெறுகிறது. அங்கு தினமும் தமிழர்கள் கொல்லப்படுகின்றனர்.

அது மாத்திரமன்றி கொழும்பில் இருக்கும் தமிழர்களையும் கொன்றுகுவிக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. சுமார் எட்டு மாதங்களாக கொழும்பில் தமிழர்கள் கடத்தப்படுகின்றனர்; கொலைசெய்யப்படுகின்றனர்; கப்பம் பெறப்படுகின்றனர்.

கொழும்பு நகரில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ள நிலையிலும் தொடர்ந்து கடத்[illegible] நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன[illegible]வாறென்றால் அரச படையினரினது[illegible] பொலிஸாரினதும் உதவியுடன்தான் இககடத்தல்கள் இடம்பெறுகின்றன.

அரசு உடனடியாக இக்கடத்தல் நடவடிக்கைகள் அனைத்தையும் நிறுத்தவேண்டும். கடத்தப்பட்ட தமிழர்களை மீட்கவும், கடத்தலுடன் சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்யவும் நடவடிக்கை எடுக்கவேண்டும். அதேபோல் வடக்கில் நிலவுகின்ற அசாதாரண சூழ்நிலையையும் அரசு இல்லாதொழிக்கவேண்டும். தமிழர்களுக்கு மேலும் மேலும் சங்கடங்களைக் கொடுக்கக்கூடாது - என்றார். (க)

## 2 லீற்றர் பெற்றோல் பெற 10 கிலோ மீற்றர் பயணிக்கும் பண்டத்தரிப்பு பகுதி மக்கள்

வலி.தென்மேற்கு,ஒக்.7

பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவு சங்க எரிபொருள் நிரப்பு நிலையம், பண்டத்தரிப்பில் இயங்கி வருகின்ற போதிலும் மானிப்பாய் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் மானிப்பாயிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பங்கீட்டு அட்டைக்கு பெற்றோலைப் பெறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது குறித்து இப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பண்டத்தரிப்பு, மாதகல், சில்லாலை, வடலியடைப்பு, இளவாலை, பெரியவிளான், பிரான்பற்று ஆகிய பகுதிகளைச் சேர்ந்த வாகன உரிமையாளர்கள் இரண்டு லீற்றர் பெற்றோலை பெறுவதற்கு சுமார் பத்து கிலோமீற்றர் தூரம் பயணித்து மானிப்பாய் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் தமக்கான 2 லீற்றர் பெற்றோலை பெறுவதற்கு மிகவும் சிரமப்பட வேண்டியிருப்பதாக மேற்படி பகுதிகளைச் சேர்ந்த மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

2 லீற்றர் பெற்றோலை பெற்றுக்கொள்வதற்கு பத்து கிலோமீற்றர் தூரம் சென்று வீணாக அலைய வேண்டிய நிலை ஏற்படிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

இதே சமயம் - அரச ஊழியர்களும் தமது மோட்டார் சைக்கிளுக்கான பெற்றோலைப் பெற்றுக்கொள்வதற்கு நீண்ட தூரம் பயணிக்க வேண்டிருப்பதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

எனவே பெற்றோலிய கூட்டுத்தாபன யாழ். பிராந்திய முகாமையாளர், பண்டத்தரிப்பு பிரதேச மக்கள் தமது பங்கீட்டு அட்டைக்குரிய பெற்றோலை பண்டத்தரிப்பிலுள்ள ப.நோ.கூ.சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (135)

## அநுராதபுரத்தில் டைனோசர்?

அநுராதபுரம், ஒக்.7

அநுராதபுரத்தில் ஒதுக்குப்புறமான பகுதி ஒன்றில் டைனோசர் போன்ற தோற்ற முடைய ஒரு வகை உயிரினம் நடமாடியதை கிராம வாசிகள் அவதானித்திருக்கின்றனர்.

சுமார் இரண்டரை அடி உயரமும், ஐந்து அங்குல அகலமும் உடைய இந்த மிருகம் பார்ப்பதற்கு டைனோசர் போலவே இருந்தது என்று அதனைக் கண்ட மக்கள் கூறியிருக்கின்றனர்.

இந்த உயிரினம் நீலம், மஞ்சள், பச்சை ஆகிய நிறங்கள் சேர்ந்த ஒரு கலவையான நிறத்தை உடையது என்றும், அந்த நிறம் இடையிடையே மாறுபட்டுத் தென்படுகிறது என்றும் அவர்கள் கூறினர். (க)

A/L [illegible] ரீட்சைக்குத் தோற்றிய [illegible]ர்களே!!
தகவல் தொழில்நுட்பத் துறையில் நீங்கள் பட்டதாரியாக வேண்டும் என்ற உங்கள் கனவினை நாம் நனவாக்கித்தருகின்றோம்.
மேலதிக விபரங்கள் 20.10.2006 உதயனில்
இயக்குநர்
IIS CITY CAMPUS
200, சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.
021 222 8060

சேவை
55,000 அமெரிக்க லொத்தர் விசா இலவச விண்ணப்ப விபரங்களுக்கு,
Penguin Book Shop
32-1-23, Bloemendhal Flats, Colombo - 13.
T.P: 0716806843, 2438367

தரம் 1 முதல் O/L, A/Lவரை அனைத்து வகுப்புகளும் வழமையான நேர அட்டவணைப்படி இன்று முதல் மீண்டும் ஆரம்பமாகின்றன.
நாவலர் இன்ஸ்ரிரியூட்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

இன்று ஆரம்பம்
விக்னா கல்வி நிறுவனம்
52,ஸ்ரான்லி றோட், யாழ்.
வகுப்புகள் யாவும் இன்று ஆரம்பமாகின்றன.
7.10.2006 (சனி)
பல மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க மேலதிக வகுப்புகளுடன் அதிதுரித மீட்டல் புதிய பிரிவு.
ஆரம்பம் 9.10.2006 8.30 (திங்கள்)
O/L Day Classes (8.30 - 2.00)
Sat., Sun. Classes (12.00 - 5.00)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெடித்தது வாகரையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருகோணமலை, சம்பூர் பகுதிகளில் முன்னர் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்த சுமார் 61 ஆயிரம் தமிழ்ப் பொதுமக்கள், தஞ்சம் புகுந்திருந்த பிரதேசங்களை நோக்கியே இப்போது மனிதாபிமானமற்ற இந்தப் போர் நடவடிக்கை முடுக்கி விடப்பட்டிருப்பதாகத் திருகோணமலை மாவட்டத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் துரைரட்ணசிங்கம் குற்றம் சுமத்தினார்.

நேற்று அதிகாலை 4.30 மணியளவில் இந்த யுத்தம் வெடித்தது.

வாகரைக்கு தெற்கே 15 கிலோமீற்றர் தொலைவிலும், மட்டக்களப்புக்கு வடமேற்கே 41 கிலோமீற்றர் தொலைவிலும் உள்ள மாங்கேணியிலேயே நேற்றைய மோதல் ஆரம்பித்தது.

அரசுப்படைகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் இடையிலான நுழைவாயில் பகுதி இங்குதான் உள்ளது.

மூதூர் கிழக்கில் 23 கிராமங்களிலிருந்தும், மூதூர் தெற்கிலிருந்தும் மற்றும் ஈச்சிலம்பற்று, வெருகல் பிரதேசத்தில் உள்ள சுமார் 20 கிராமங்களிலிருந்தும் இடம்பெயர்ந்த 61 ஆயிரம் பொதுமக்களே தற்போது தாக்குதலுக்கு இலக்காகியிருக்கும் வாகரைப் பகுதியில் தஞ்சம் புகுந்திருக்கின்றனர்.

தற்போதைய படை நடவடிக்கையால், இந்த அகதி மக்களுக்குப் பேராபத்து நேர்ந்திருப்பதாகத் துரைரட்ணசிங்கம் எம்.பி. குறிப்பிட்டார்.

இந்த விடிகாலைச் சமரில் புலிகளின் 22 சடலங்களைத் தாங்கள் கைப்பற்றியிருக்கின்றனர் என அரச பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சமருக்கு முன்னேற்பாடாக நேற்றுமுன்தினம் இரவே கதிரவெளிப் பகுதி மீது இஸ்ரேல் தயாரிப்பு 'கிபிர்' ஜெட் விமானங்கள் வான்வழித் தாக்[illegible]தலை ஆரம்பித்து விட்டன என்றும் தெரி[illegible]க்கப்பட்டது.

திருகோணமலை, சம்பூர் [illegible]லிருந்து புலிகள் விலகியபோது, [illegible] தங்களது கனரக ஆயுதங்களை [illegible] வாகரைப் பகுதிக்கு நகர்த்தினர் என்[illegible]ம் -

மட்டக்களப்பு மாவட்டம், [illegible]ரையிலிருந்து அரசுக்கட்டுப்பாட்டுப் பகுதிகளை இந்த ஆயுதங்கள் மூலம் தற்போது புலிகள் இலக்கு வைக்கின்றனர் என்றும் -

அத்தகைய ஆயுதங்கள் மற்றும் அவற்றின் நகர்வுகளை இலக்கு வைத்தே தற்போதைய தாக்குதல்களைப் படைத்தரப்பு நடத்துகின்றது என்றும் -

வேறு பாதுகாப்பு வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன. (உ)

# கல்விச் செயற்பாடுகளுக்குத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ணமாக யாழ். குடாநாட்டில் கல்விச் சமூகத்தினரும் ஏனையோரும் எதிர்கொள்ளும் பரிதாபகரமான நிலைமை மற்றும் பிரச்சினைகள் விவரிக்கப்பட்டுள்ளன.

அறிக்கையின் எஞ்சிய ஒரு பகுதி வருமாறு:-

குடாநாட்டில் 08.09.2006 முதல் கற்றல் - கற்பித்தல் தவிர்ப்பு களை மேற்கொண்டு வரும் மாணவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக அரச அதிபர், யாழ். ஆயர், கல்விப்பணிப்பாளர் கள், பல்கலைக்கழக ஆசிரியர் சமூகத்தினர் போன்றோரிடம் பல சந்திப்புகளை நடத்தினோம். எமது பிரச்சினைகளை ஏற்றுக்கொண்ட அவர்கள் அரசுக்கு அழுத்தம் கொடுத்து எமக்குரிய தீர்வினை விரைவாக பெற்றுத்தருவோம் என உறுதியளித்துள்ள னர். இது தொடர்பாக உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கோரி சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் அவர்கள் பகிரங்க வேண்டுகோள்களை விடுத்துள்ளனர்.

**உடன் முயற்சி எடுக்க வேண்டும்**

தமிழ் மாணவர்களின் ஒருமித்த சக்தி என்றவகையில் எதிர்வரும் க.பொ.த. (சாதாரண) தரப் பரீட்சை, புலமைப்பரிசில் பரீட்சை போன்றவற்றை கருத்திற்கொண்டு அரசின் மீதான மிகுந்த அதிருப்தியோடும் வெறுப்போடும் எதிர்வரும் 09.10.2006 திங்கட்கிழமை பாடசாலைக்கு க.பொ.த. (சாதாரண) தரப்பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களும் ஏனையோர் 11.10.2006 புதன் கிழமையும் பாடசாலைக்கு சமுகமளிக்க உத்தேசித்துள்ளோம்.

எனினும், மாணவர்கள் பாடசாலைக்குச் சென்று கற்றலில் ஈடுபடுவது பல்வேறு இடர்களைத் தந்தாலும், சற்றுப் பொறுமை காத்து கல்வியைத் தொடருமாறும் தடையாக உள்ள விடயங்கள் தொடர்பாக உரிய தரப்புகளுக்கு பல்வேறுபட்ட வழிகளில் பிரச்சினைகளைத் தெளிவுபடுத்தி உரிய தீர்வுக்காக தமிழ் மாணவர் ஒன்றியம் தொடர்ந்தும் போராடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எமது கற்றல் தவிர்ப்பு போராட்டத்திற்கு பூரண ஆதரவு நல்கிய ஒட்டுமொத்த கல்விச் சமூகத்திற்கும் மனமார்ந்த நன்றியினைத் தெரிவிப்பதோடு, அரசிடமிருந்து எமது கோரிக்கைக்கான தீர்வினைப் பெற்றுத்தர சம்பந்தப்பட்டவர்கள் உடன் முயற்சி எடுக்கவேண்டும் என்றும் கோருகின்றோம் - இவ்வாறு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இந்திய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை நிலைவரங்கள் குறித்தும் குறிப்பாக விடுதலைப் புலிகளுக்கும், படையினருக்குமிடையில் இடம்பெற்றுவரும் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டிருக்கலாம் என அரசியல் அவதானிகள் தெரிவித்தனர். (க-12)

# புலிகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதேசத்தில் இலங்கை இராணுவத்தினர் நேற்று அதிகாலை வலிந்த தாக்குதலை மேற்கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதிக்குள் ஊடுருவியுள்ளனர் என எமக்கு அறிவிக்கப்பட்டது.

அமைதிப் பேச்சுக்கு இணக்கம் தெரிவித்துள்ள நிலையிலும் ஆக்கிரமிப்பு நடவடிக்கை தொடர்ந்தால் சமாதான நடவடிக்கைகளிலிருந்து விலகுவோம் என்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்திருந்த நிலையில் இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கையை இலங்கை இராணுவம் மேற்கொண்டுள்ளமை தவறானது - என அவர் தெரிவித்தார். (க)

# பனிச்சங்கேணி ஆக்கிரமிப்பு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மோதல் சம்பவம் குறித்து இணையத்தளம் ஒன்றுக்கு வழங்கிய தகவலிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார் எழிலன். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பனிச்சங்கேணிப் பகுதியை நோக்கி நேற்று (வெள்ளிக்கிழமை) காலை 4.20 மணியளவில் இராணுவத்தினர் ஒரு தாக்குதல் நடவடிக்கையைத் தொடங்கினர். இந்தத் தாக்குதல் நடவடிக்கையில் பெருந்தொகையான இராணுவத்தினரும், அவர்களுடன் சேர்ந்தியங்கும் துணை இராணுவக் குழுவினரும் ஈடுபட்டிருந்தனர்.

இவர்கள் எமது கட்டுப்பாட்டிலுள்ள முன்னரங்கப் பகுதிக்குள் ஊடுருவித் தாக்குதலைத் தொடங்கி அதேநேரத்தில் மட்டக்களப்பு காகித ஆலை இராணுவ முகாமிலிருந்து வாகரைப் பிரதேசம் நோக்கி ஷெல் வீச்சுகள், பல்குழல் பீரங்கிக் குண்டுகள் வீசப்பட்டுக்கொண்டிருந்தன.

அந்தத் தாக்குதலுடன் டாங்கிகள், பவள் மற்றும் கவச வாகனங்கள் சகிதம் ஒரு முன்னேற்ற நடவடிக்கையை நேற்று இராணுவத்தினர் மேற்கொண்டனர். இதற்குப் பதில் நடவடிக்கையை எமது போராளிகள் மேற்கொண்டனர். தொடர்ந்து அந்தப் பிரதேசத்தில் மோதல்கள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. இந்த மோதல்கள் நடைபெற்றுக்கொண்டிருந்தபோதே பிற்பகல் ஒரு மணியளவில் பனிச்சங்கேணிப் பகுதிக்கு வந்த கடற்கலங்களிலிருந்து அரச கடற்படையினர் அப்பகுதியில் தரையிறக்க நடவடிக்கையை மேற்கொண்டனர். இந்தத் தரையிறக்க நடவடிக்கையைக் கடற்புலிகள் முறியடித்தனர். இதனையடுத்து அரச கடற்படையினர் தரையிறக்க நடவடிக்கையைக் கைவிட்டு பின்வாங்கினர்.

அதன்பின்னர் அரச விமானப் படையினரின் கிபிர் விமானங்கள் அந்தப் பகுதிகளில் தொடர்ச்சியாக நான்குமுறை வான்குண்டுத் தாக்குதல்களை நடத்தின. இந்தத் தாக்குதல் நடவடிக்கை மாலை 5 மணி வரை தொடராக நீடித்தது.

ஊடுருவிய இராணுவத்தினரையும், அவர்களுடன் சேர்ந்தியங்கும் துணை இராணுவக் குழுவினரையும் விரட்டியடிக்கும் தாக்குதல்களில் எமது போராளிகள் ஈடுபட்டனர். இதனால், இராணுவத்துக்குக் கணிசமான இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. எமது தரப்பில் 5 போரா ளிகள் வீரச்சாவைத் தழுவியுள்ளனர்.

இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்ட இராணுவத்தினர் மற்றும் துணை இராணுவக்குழுவினரது உடல்களை நாங்கள் கைப்பற்றியுள்ளோம். மொத்தம் 30 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களின் ஆயுதத் தளபாடங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. காயமடைந்திருந்த இராணுவத்தைச் சேர்ந்த ஒருவரை நாங்கள் கைதுசெய்துள்ளோம்.

இது ஒரு மிக மோசமான ஆக்கிரமிப்பு நடவடிக்கை என்று நேற்று காலை 7மணிக்கே இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் திருகோணமலை மாவட்டக் குழுவுக்குத் தெரியப்படுத்தியுள்ளோம்.

அரச இராணுவத்தினரின் இந்த வலிந்த தாக்குதல் தொடங்கிய நிலையில் உடனடியாக மக்களை அங்கிருந்து பாதுகாப்பான பிரதேசங்களுக்கு நகர்த்தினோம். ஆகையால் மக்களுக்குப் பாரிய இழப்புகள் எதுவும் ஏற்படவில்லை. இந்தத் தாக்குதலில் 7 பொதுமக்கள் படுகொலைசெய்யப்பட்டுள்ளனர். 5இற்கு மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். பாதுகாப்பான இடங்களுக்கு அவர்கள் நகர்த்தப்பட்டமையால் உயிரிழப்புக் குறைக்கப்பட்டது.

இதேவேளை -

இராணுவத்தினரின் தொடர்ச்சியான ஷெல் தாக்குதல்கள் நடைபெற்ற நிலையில் முன்னரங்கக் காவலரண் பகுதிகளிலிருந்து மக்கள் ஏற்கனவே வெளியேறியிருந்தமையாலும் பெரிய அளவிலான இழப்புகள் தவிர்க்கப்பட்டன. பனிச்சங்கேணிப் பிரதேசம் முற்றுமுழுதாகத் தொடர்ந்து எமது கட்டுப்பாட்டிலேயே உள்ளது.

சில ஊடகங்கள் இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் துணை இராணுவக் குழுவினர்தான் தாக்குதல் நடத்தினர் எனக் கூறியுள்ளன. அந்தக் குழுவினரிடம் விமானங்கள், பவள் கவச வாகனங்கள், டாங்கிகள் மற்றும் கடற்கலங்களின் உதவியுடன் அந்தக் குழுவினர் தாக்குதல் நடத்துவார்களா?

இராணுவத்தினரே இந்தத் தாக்குதலை மேற்கொண்டனர் என்பதற்குச் சான்றாக அவர்களது உடல்களும், கைதுசெய்யப்பட்ட நபரும் உள்ளனர். கைப்பற்றப்பட்ட உடல்களை ஒப்படைப்பது தொடர்பாக மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டக் கண்காணிப்புக் குழுவினரைத் தொடர்புகொண்டு தெரிவித்திருக்கிறோம். மேலும் இராணுவத்தினர் ஊடுருவி மேற்கொண்டமையைப் பார்வையிட வேண்டும் என்றும் வேண்டுகோள்விடுத்துள்ளோம். அவர்கள் நேற்று வருவதாக இருந்தார்கள். அவர்கள் வருவதற்கான பாதை இல்லாமையால் இன்று வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

இத்தாக்குதல்களால் மாங்கேணியூடான போக்குவரத்து நேற்றுப் பாதிக்கப்பட்டிருந்தது. இன்று இந்தப் போக்குவரத்து சீராகும் என்று கருதுகிறோம். அப்படிச் சீராகவில்லையெனில் வாகரையில் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்குப் பாரிய நெருக்கடியை அது ஏற்படுத்தும் - என்றார். (க)

# ஜி.சீ.ஈ. பெறுபேறு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கணிதப்பிரில் வவுனியா தமிழ் மகா வித்தியாலய மாணவன் குகராஜன் ரஜீவன் கணிதப்பிரிவில் அகில இலங்கை ரீதியில் 4 ஆவது இடத்தையும் 9ஆவது இடத்தைதைப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலை மாணவன் குமாரசாமி கணேசனும் பெற்றுக்கொண்டனர்.

இணையத்தளம் மூலம் முற்கொண்டு பெற்றுக்கொள்ளப்பட்ட பெறுபேறுகளின் படி யாழ். இந்துக்கல்லூரியைச் சேர்ந்த 10 மணவர்கள் 3 பாடங்களிலும் 'ஏ' சித்தி பெற்றுக்கொண்டுள்ளனர்.

அதேபோல், வேம்படி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த 8 மாணவிகளும், புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரியைச் சேர்ந்த 2 மாணவிகளும் உடுவில் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த 7 மாணவிகளும் '3ஏ' பெற்றுள்ளனர்.

குடாநாட்டு பாடசாலைகளின் பெறுபேறுகளை யாழ். எடுத்துவருவதற்கு இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று கூறப்பட்டது.

இதற்கிடையில் - குடாநாட்டு மாணவரின் பெறுபேறுகளை தபால்மூலம் அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று பரீட்சை ஆணையாளர் அநுர எதிரிசிங்க தெரிவித்தார். (111)

**விவரம் 2 ஆம் பக்கத்தில்**

# புலிகளின் பாதுகாப்புச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளின் மீது எவ்வாறான தவறுகளை - குற்றங்களை - சுமத்தும் நடவடிக்கைகளையே இலங்கை அரசு செய்து வருகின்றது. இதனை சர்வதேச சமூகம் தெளிவாகப் பார்க்கின்றதா?

யுத்தமுனை - களமுனைகளில் இலங்கை அரசும் - அதன் படைத் தரப்பும் எதனை - எவற்றை போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினருக்கு மறைக்க நினைக்கின்றனர்.

இவற்றின் மூலமாக அவர்கள் மேற்கொள்ள திட்டமிடும் நடவடிக்கைகளின் நோக்கங்கள் என்ன என்பதையே எமது பாதுகாப்புச் சபையில் விவாதித்தோம் எனவும் தெரிவித்தார். (க-12)

# பாலைதீவுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடல் மோதல் நடந்ததை இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிர சாத் சமரசிங்கவும் உறுதி செய்தார்.

''பாலைதீவிலிருந்து யாழ். குடாநாட்டிற்குச் சென்று கொண்டிருந்த விடுதலைப் புலிகளின் படகுகளை அவதானித்த கடற்படையினர் ஆட்லறித் தாக்குதலை மேற்கொண்டனர். கடற்சமரும் இடம்பெற்றது. இதில் புலிகளின் 6 படகுகள் மூழ்கடிக்கப்பட்டன. ஒரு படகு பற்றி எரிந்து பின்னர் மூழ்கியது. எனினும், புலிகளுக்கு ஏற்பட்ட சேதவிவரங்கள் குறித்துத் தெரியவரவில்லை.''

- என்று பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க கூறினார். எனினும், இந்தச் சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து நேற்று மாலை வரை எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. (த)

# 30 இராணுவத்தினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியிலிருந்து பீரங்கி மற்றும் கனரக ஆயுதங்கள் மூலம் தாக்குதல் நடத்தினர். படையினரின் முன்னரங்க காவலரண்மீது சிறு ஆயுதங்கள் கொண்டு அவர்கள் தாக்குதல் நடத்தினர். இதனையடுத்து படையினர் பதில் தாக்குதல் நடத்தி புலிகளின் தாக்குதலை முறியடித்தனர்.

பனிச்சங்கேணியிலிருந்து புலிகள் மோட்டார் தாக்குதலை நடத்தினர். அதனால் மோட்டார் நிலைகளைத் துருப்பினர் தாக்கி அழித்தனர். பனிச்சங்கேணியிலுள்ள பாலம் புலிகளால் உடைக்கப்பட்டது. இத்தாக்குதலில் 8 படையினருக்கு காயம் ஏற்பட்டது.

விடுதலைப் புலிகளின் மேலதிக போராளிகளை ஏற்றிவந்த இரண்டு படகுகள் வாகரையை அடுத்துள்ள பகுதியில் கடற்படையினரால் மூழ்கடிக்கப்பட்டது.

கேள்வி:- விடுதலைப் புலிகளுக்கு எந்தளவில் சேதம் ஏற்பட்டது.

பதில்:- விடுதலைப் புலிகளுக்கு எந்தளவில் சேதம் ஏற்பட்டது என்று தற்போது உறுதியாகக் கூறமுடியாது. ஆனால், முன்னரங்க பகுதியிலுள்ள துருப்பினர் 20 முதல் 25 உடல்கள் இருந்ததை அவதானித்துள்ளனர்.

கே:- விடுதலைப் புலிகளின் சடலங்கள் ஏதாவது உங்களிடம் உள்ளனவா.

ப: தொடர்ந்து சண்டை நடைபெற்று வருவதால் உடல்கள் எதனையும் படையினர் கைப்பற்றவில்லை.

கே: இந்தத் தாக்குதலை படையினர் வலிந்து நடத்தியதாக விடுதலைப் புலிகள் குற்றஞ்சுமத்துகின்றனரே. படைத்தரப்பில் 30இற்கும் மேற்பட்ட உயிரிழப்புகள் ஏற்பட்டிருக்கலாம் என்றும் புலிகள் கூறுகின்றனர். இது குறித்து...

ப: இது தவறு. எங்கள் தரப்பில் 8 பேருக்கு மட்டுமே காயம் பட்டது. அதில் இருவருக்குத்தான் மோசமான காயம் ஏற்பட்டது. மற்றவர்களுக்கு லேசான காயம் தான். அவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். விடுதலைப் புலிகள்தான் பீரங்கி மற்றும் மோட்டார் தாக்குதலில் ஈடுபட்டனர். படையினரைத் தாக்கினர்.

கே: இந்தத் தாக்குதலில் கருணாகுழுவினரும் பிற ஆயுதக்குழுக்களும் இராணுவத்தினருடன் இணைந்து பங்கேற்றதாக விடுதலைப் புலிகள் குற்றம்சாட்டுகின்றனர். இதில் உண்மை இருக்கிறதா.

ப: எந்தக் குழுவும் இத்தற்காப்பு நடவடிக்கையில் ஈடுபடவில்லை. இது தவறு. இங்கு படையினர் விமானப் படையினரின் உதவியுடன் புலிகளின் இத்தாக்குதல்களை முறியடித்தனர். கடற்படையினரும் தாக்குதலில் பங்குபற்றினர். எந்தக் குழுவும் இதில் பங்குபற்றவில்லை.

கே: மூதூரில் 17 சர்வதேச தொண்டு நிறுவன பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்ட விசாரணைகள் முறையாக நடத்தப்படவில்லை என அந்த நிறுவனம் குற்றஞ்சாட்டியுள்ளது. இதுபற்றி...

ப: இது குறித்து என்னால் கருத்து எதுவும் கூறமுடியாது. விசாரணைகள் நடந்து வரும் நிலையில் இராணுவத்தின் சார்பில் பேசவல்ல என்னால் கருத்துக்கூற முடியாது. இதுகுறித்து பொலிஸாரும் நீதிமன்றங்களும்தான் கருத்துச் சொல்லவேண்டும் - என்றார். (க-12)

**MATHS EXAM**
(தேசிய பாடத்திட்டம்)
காலம் : இன்று (07.10.06)
நேரம் : 1 மணி (சனி)
இடம் :
நாவலர் இன்ஸ்ரிரியூட்
ஆனைப்பந்தி, யாழ் நகர்.
By: S.Vasu

**யூனிவேர்சல்**
அனைத்து வகுப்புகளும்
வழமை போன்று
நடைபெறுகின்றன.
புதிய அனுமதிகள் வழங்கப்படும்
T.P.: 021 222 8218

**COLLEGE OF ENGLISH**
வகுப்புகள் வழமையான
நேர அட்டவணைப்படி
இன்று ஆரம்பம்
O/L English
Paper Class
புதிய பிரிவு: Sat, Sun
Batch I - 10 - 11 a.m
Batch II - 2 - 3 p.m

**பணியாள் தேவை**
தொலைத்தொடர்பு நிலையம் ஒன்றில் பணிபுரிவதற்கு கணினி சம்பந்தமான அறிவுடைய பெண் ஒருவர் தேவை. யாழ் நகரம் அதனை அண்டிய பகுதிகளில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. உடனடியாக தொடர்பு கொள்ளவும்.
தொ.பே.: 021 222 3481, 021 222 5169

**அதிர்ஷ்டம் இருக்கிறதா!!!**
DV 2008 அமெரிக்க லொத்தர் விசாவுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் ஒரு பாஸ்போட் அளவு புகைப்படத்துடன் உடன் தொடர்பு கொள்ளவும்.
திருமுருகன் கொம் நெற்
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். 2227835

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.10.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org